Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 பங்குனி-30 12-04-2005 செவ்வாய்க்கிழமை ஓசை-53



S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
உரிமையாளர்:- S.M. சண்முகரத்தினம்.
T.P: 024-222 4247 (சி-11481)

# தென்னாபிரிக்க உப சனாதிபதியை தமிழ்ச்செல்வன் சந்தித்துப் பேச்சு

## போர்நிறுத்தத்தைப் பேணவும், இடைக்கால நிர்வாகம் குறித்துப் பேசவும் தயாரெனத் தெரிவிப்பு

(டேர்பன்)

**தென்னாபிரிக்கா டேர்பன் நகரில் தென்னாபிரிக்காவின் உப சனாதிபதி ஜகோப் சுமாவை அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தலைமையிலான அரசியல்குழுவினர் நேற்றுச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். போர்நிறுத்த உடன்பாட்டிற்கு உத்தரவாதம் அளிப்பதுடன் இடைக்கால நிர்வாகசபை அமைப்பது தொடர்பாக வழங்கப்பட்ட திட்ட வரைபின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்க விடுதலைப்புலிகள் தயார் என இச் சந்திப்பின்போது சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார்.**

உப சனாதிபதி தென்னாபிரிக்க மக்கள் சார்பாக சுனாமியால் இறந்தவர்களிற்காக தமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்தார்.

எவ்வாறு முன்னைய ஐ.தே.கட்சி சிறிலங்கா சனாதிபதியால் கலைக்கப்பட்டது என்றும், புதிய ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியைத் தோற்றுவிப்பதற்கு சேர்ந்துள்ள கட்சிகளின் சமாதான முன்னெடுப்புக்கள் பற்றிய எதிரெதிரான தோற்றப்பாடுகள் பற்றியும் அரசியல் துறைப்பொறுப்பாளர் உப சனாதிபதி சுமாவிற்கு எடுத்து விளக்கினார். அரசின் கூட்டுக்கடசியினுள் உடன்பாட்டை அடைவதற்கு உதவுகின்ற அரசியல்நிலைமை இல்லை எனவும், இதன் விளைவே அரசாங்கத்தின் ஒரு பகுதிச் செயலின்மைக்குக் காரணம் எனவும் எடுத்துக் கூறினார்.

சுனாமியால் பாதிப்படைந்த மக்கள் நலன் புரி நிலையங்கள் மோசமான நிலையிலுள்ள போது சுனாமிப் புனர்நிர்மாண நடவடிக்கைக்கான இணைந்த செயற்றிட்டக் கட்டமைப்பை உருவாக்குவதற்கான திட்டவரைவில் கையொப்பமிட அரசாங்கம் தாமதித்துக் கொண்டிருக்கிறது என சு.ப.தமிழ்ச்செல்வன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்கக்கோரி வவுனியாவில் மாபெரும் எழுச்சிப் பேரணி

## கோரிக்கை மகஜர்களும் சமர்ப்பிப்பு

(வவுனியா செய்தியாளர்)

சிறிலங்கா அரசாங்கத்தால் இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை உடன் ஆரம்பிக்குமாறு கோரி வவுனியாவில் நேற்று மாபெரும் எழுச்சிப் பேரணி நடத்தப்பட்டதுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு கோரிக்கை மகஜர்களும் கையளிக்கப்பட்டன. இதில் பெருமளவான மக்கள் எழுச்சியுடன் கலந்துகொண்டனர்.வவுனியா மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ் எழுச்சிப் பேரணி காலை 10.00 மணிக்கு வவு னியா தமிழ் மத்திய மகாவித்தியா லயம் முன்பாக ஆரம்பமாகி கண்டி வீதி,மணிக்கூட்டுக் கோபுர சந்தி ஊடாக வவுனியா நகரசபை மைதானத்தைச் சென்றடைந்தது.

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவநாதன் கிஷோர்,சிவசக்தி ஆனந்தன், வினோநோகாரதலிங்கம் ஆகியோர் தலைமையில் ஆரம்ப மாகிய இப்பேரணியில் கொழுத்தும் வெய்யிலையும் பொருட்படுத்தாது ஆயி ரக்கணக்கான மக்கள் கலந்துகொண் டனர்.

இவ் எழுச்சிப் பேரணியில் கலந்துகொண்ட மக்கள் " சமாதானம் இன்றேல்

(12 ஆம் பக்கம் பார்க்க)



## வீரச்சாவு

கிரான் என்னும் இடத்தில் 04.02.2005 அன்று தேசவிரோதிகளினால் சுடப்பட்டு போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

வீரவேங்கை- நிவேசன்

(சின்னத்துரை - தேவதாசன் புலிபாய்ந்தகல் கிரான் மட்டக்களப்பு) என்ற போராளியே வீரச்சாவடைந்தவராவார். இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## கிளி.யிலும்,தென்மராட்சியிலும் இன்று கண்டனப் பேரணிகள்

(நமது நிருபர்)

சிறிலங்கா அரசுக்கெதிராக இன்று கிளிநொச்சி நகரிலும், யாழ் குடாநட்டின் தென்மராட்சிப் பிரதேசத்திலும் மாபெரும் கண்டனப் பேரணியும் மகஜர்கள் கையளிப்பும் இடம்பெறவுள்ளது.

அந்தந்தப் பிரதேச பொதுஅமைப்புக்களின் ஏற்பாட் டில் இந்தப் பேரணிகள் நடத்தப்படவுள்ளன.

போராளிகள் மீது இராணுவத்தினரால் மேற்கொள்ளப் படும் தாக்குதல்களைக் கண்டித்தும், இடைக்கால நிர்வாகம் மற்றும் சுனாமி உதவி வழங்கல் தொடர்பான பொதுக்கட்டமைப்பை உருவாக்குதில் சிறிலங்கா அரசு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

சுகயீனம் காரணமாக 08.04.2005 அன்று நாட்டுப்பற்றாளர் ஒருவர் சாவடைந்துள்ளார்.

நாட்டுப்பற்றாளர் நடராசா தில்லைக்கூத்தன் (இளையதம்பி -நடராசா, கரம்பன் ஊர்காவற்துறை யாழ்ப்பாணம். த.மு.கொழும்பு) என்பவரே சாவடைந்தவராவார்.

முல்லைத்தீவுப்பகுதியில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக 26.12. 2004 அன்று நாட்டுப்பற்றாளர் ஒருவர் சாவடைந்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொலநறுவை தீவுச் சேனைக்கு கண்காணிப்புக்குழு விஜயம்

(கொழும்பு)

பொலநறுவை மாவட்டம் வெலிக்கந்தை பிரதேசத்திலுள்ள தீவுச்சேனையில் கருணா குழுவின் முகாம் இருக்கின்றது என்ற தகவல் உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து கடந்த வெள்ளிக்கிழமை இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் அங்கு சென்று திரும்பியுள்ளனர்.

சிறிலங்கா இராணுவ தலைமையகத்தைச் சேர்ந்த இராணுவ அதிகாரியொருவர் இவர்களை அங்கு அழைத்துச் சென்றார். கண்காணிப்பாளர்கள் அங்கு சென்ற சமயம் தீவுச்சேனையில் கருணா குழுவின் முகாம்கள் எதுவும் இல்லாதது போல் அந்த இடம் காணப்பட்டது. சிறிலங்கா சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு விசாரணையின் போது சாட்சியமளித்த மடடக்களப்பு மாவட்ட தலைமைக் கண்காணிப்பாளர் ஸ்டீன் ஜோர்ன்சன் தீவுச்சேனையில் கருணா குழுவின் முகாம் இருப்பது குறித்து உறுதிபட சாட்சியமளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஈ.பி.டி.பி மாவட்ட அமைப்பாளர் திருமலையில் சுட்டுக்கொலை

திருகோணமலையில் ஈ.பி.டி.பி யின் மாவட்ட அமைப்பாளர் ஒருவர் இனந்தெரியாதோரினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுக்காலை பத்துமணியளவில நடந்துள்ளது. மூதூரைச் சேர்ந்தவரான விஜேதாசன் விஜேந்திரன் (வயது 30) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சமுர்த்தி உத்தியோகத்தர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலி

அம்பாறை மாவட்டம் கல்முனையில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு சமுர்த்தி உத்தியோகத்தரொருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். சீவரெத்தினம் அருளம்பலம் என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார். வெளியூர் பயணமொன்றை முடித்துக்கொண்டு தனது மகனுடன் பேருந்தில் வந்திறங்கி மணல்சேனை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் இளைஞர் ஒருவர் அதிரடிப்படையினரால் கைது

அம்பாறை-கண்டி வீதி பதுளைச்சந்தியில் நேற்று முன்தினம் மாலை இளைஞரொருவர் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் கான்ஸ்டபிள் சுட்டுக்கொல்லப்பட்டார்

கல்முனை மாவடிச்சேனைப் பிரதேசத்தில் முன்னாள் றிசேவ் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் நடந்த இந்தச் சம்பவத்தின் போது கொல்லப்பட்டவர் எஸ். அருளம்பலம் என்பவரென சிறிலங்கா நடவடிக்கைத் தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது

## வரிவிளம்பரம்

### SCIENCE HALL

13.04.2005 காலை 10.00 மணிக்கு O/Lமீட்டல்வகுப்பும், 16.04.2005 சனி பிற்பகல்3மணிக்கு 2007 வர்த்தகப பிரிவுகளுக்கான வகுப்புக் களும்ஆரம்பம்.நிர்வாகி. (5825)

### அமுதன் கல்வி நிலையம்

13.04.2005 காலை10.00 மணிக்கு O/L மீட்டல் பகல்நேரவகுப்புக்களும், 16.04.2005 சனி காலை 9.00 மணி 2007 கலைப்பிரிவுகளுக்கான வகுப் புக்களும் ஆரம்பம். நிர்வாகி. (5825)

### ஜோண் கல்விநிலையம் புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

2007-A/L கலைவகுப்புக்கள் 15.04.2005-வெள்ளி காலை 10.00 மணிக்கும் O/L மீட்டல்வகுப்புக்கள் 13.04. 20005- புதன் காலை 6.30 மணிக்கும் ஆரம்பமாகும். நிர்வாகி. (5821)

### மணமகன் தேவை

யாழ்.இந்துக் குடும்பத்தைச் சேர்ந்த 1973 இல் பிறந்த 8 செவ்வாய் உள்ள பெண்ணுக்கு மணமகன் தேவை. தகுதி தராதரம் பெரிதாக எதிர்பார்க்கப் படமாட்டாது. ஏனைய யாவும் நேரில பேசித்தீர்மானிக்கலாம். தொடாபுகளுக்கு:- 0112458073, 2227917 (5373)

## கலந்துரையாடல்

முல்லைத்தீவு பிரதேச வர்த்தகர் களுக்கான சிறப்புக் கலந்துரையாடல் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு முல்லைத்தீவு றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் நடைபெற வுள்ளதாக முல்லைத்தீவு பிரதேச வர்த்தக சங்கத்தலைவர் பி.ஆர். யோசப் தெரிவித்தார். இதில் சகல வர்த்தக நிலைய உரிமையாளர் களையும், பணியாளர்களையும் தவறாது சமுகம் கொடுக்கும்மாறும் அவர்மேலும் கேட்டுக்கொண்டார்.(08)

## சுனாமி நிதிக்கொடுப்பனவு

(முல்லைத்தீவு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மக்களுக்கான மக்கள் வங்கி மூலமான சுனாமி நிதிக் கொடுப்பனவு கடந்த இருவாரங்களாக சனி,ஞாயிறு ஆகிய நாட்களில் முல்லைத்தீவில் வழங்கப்பட்டு வரு கின்றது.

எதிர்வரும் சனிக்கிழமை செம் மலை கிழக்கு நாயாறுக்கிராமம், செம் மலை ஆகிய இரு கிராமமக்களுக்கு செம்மலை மகாவித்தியாலயத்தில் வழங்கப்படும். ஞாயிற்றுக்கிழமை காலை8.30 மணிதொடக்கம் 12.00 மணிவரை உப்புமாவெளிகிராம மக்களுக்கு உப்புமாவெளி கிராம அலுவலகத்தில் நண்பகல் 1.00 மணியி லிருந்து பிற்பகல் 4.00 மணிவரை அளம்பில் வடக்கு, அளம்பில்தெற்கு கிராமமக்களுக்கு அளம்பில்தெற்கு கிராமஅலுவலர் அலுவலகத்தில் வைத்து சுனாமி நிதி வழங்கப்பட வுள்ளது. பணம் பெறவருவோர் தமது தேசியஅடையாள அட்டையையோ, அல்லது தற்காலிக அடையாள அட்டை யையோ கொண்டு வருமாறு அறிவிக் கப்பட்டுள்ளது. வைப்புக்கணக்குப் புத்தகத்தில் உள்ள பெயருக்குரியவரே பணம் பெற வர வேண்டும் என மக்கள் வங்கி முகாமையாளர் தெரிவித் துள்ளார். (08)

### 143 தொண்டர்ஆசிரியர்கள் நிரந்தர நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாணத்தில் தொண்டராசிரியர்களாக பணியாற்றிய வர்களில் நூற்றி நாற்பத்துமூன்று பேர் நிரந்தரநியமனம் பெற்றுள்ளனர். இதில் யாழ்.கல்விவலையத்தில் மூன்றுபேருக்கு மட்டுமே இந் நிய மனம் வழங்கப்பட்டுள்ளது. (சு)

## முல்லைக் கல்வி நிலையத்தின் க.பொ.த (சாதாரண) முடிவுகள். 2005

| | |
|---|---|
| சி. பிரசாத் | 10A |
| எஸ்.கேதரன் | 09A,C |
| லோ.துஸ்யந்தி | 07A,02B,C |
| ஸ்ரீ.சந்தியா | 07A,B,2C |
| சி.தீபா | 06A,03C,S |
| சௌ.உமாக்காந் | 06A,03B,C |
| ப.சிவரதன் | 04A.03B,C |
| சௌ.கீர்த்தனி | 04A,04C,02S |
| சி.நிஷாந்தினி | 03A,05C,S |
| சீ.யேசுரெட்ணம் | 03A,03B, 02C, 02S |

மேலே குறிப்பிடப்பட்ட மாணவச்செல்வங்களை வாழ்த்துகின்றோம்.

நிர்வாகி.
முல்லைக் கல்வி நிலையம்,
தண்ணீரூற்று,
முள்ளியவளை.

(5824)

## சாவு அறிவித்தல்

### வேலுப்பிள்ளை சதாசிவம் (முன்னைய நாரந்தனை கிராமசபை உறுப்பினர்)

ஊர்காவற்றுறை புளியங்கூடலைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சதாசிவம் அவர்கள் 11.04.2005 நேற்றுக் காலமானார். அன்னார் வேலுப்பிள்ளை சிவக்கொழுந்துவின் அன்பு மகனும், துரையப்பா நாகமுத்துவின் அன்பு மருமகனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் கமலா,தேவகி, திருவருள், இந்திரன்,கலைவாணி ஆகியோரின் தந்தையும் கணேசலிங்கம், விசயரெத்தினம், வசந்தகுமாரி, தாமரைவதனி, குகநாதன் ஆகியோரின் மாமனாரும், சுபாரெத்தினம், காலஞ்சென்ற நாகம்மா, காலஞ்சென்ற கமலம், முருகேசு, சோமசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை நவரெத்தினம், காலஞ்சென்றவர்களான கனகமணி, மகாலிங்கம், துரைச்சுவாமி ஆகியோரின் மைத்துனரும் அமுதினி, அருளினி , அஞ்சனா, வித்யா, வினோதா, விவேகா,விசாளினி, விபீஷன், திவ்யா, மதுஷா, மயூரா, மகிந்தா, நிரூஷன், சஜீவன், சஞ்சிகா, சோபிதன், சௌமியா, நிதர்ஷா, நிஷாங்கன், நிஷாயினி மற்றும் சாந்தகிரிநாதன், குணசீலன், அகிலன் ஆகியோரின் அன்புப் பேரனும் சாத்வீகா, மதுஷன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12.04.2005 இன்று மாலை மூன்று மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுருவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை.

(சி.11634)

தகவல்:-
ச.திருவருன்.
(மகன்)

## பதவி வெற்றிடம்

### தொழில்நுட்ப உத்தியோகத்தர்

பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கு உட்பட்ட யுனிசெப் வேலைகளை மேற்பார்வை செய்வதற்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவரை ஒப்பந்த அடிப்படையில் அமர்த்துவதற்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

**தகைமை:-** NDT,NCT அல்லது இலங்கை தொழில்நுட்பக் கழகங்களினால் வழங்கப்பட்ட தொழில்நுட்ப டிப்ளோமா பயிற்சி நெறி (குடிசார்)

**வயதெல்லை:-** 30 இற்கு மேல்

**விண்ணப்ப முடிவுத்திகதி :-** 25.04.2005

**விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி :-** பிரதி மாகாணசுகாதார சேவைகள் பணிப்பாளர்,
பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி.

**சம்பளம் :-** பேசித் தீர்மானிக்கப்படும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் வசிக்கும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பம் விரும்பத்தக்கது தகைமைகள், அனுபவங்கள் என்பன உள்ளடக்கியதாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 25.04.2005இற்கு முன்பதாக எமக்குக் கிடைக்கக் கூடியவாறு தபாலிலோ, நேரிலோ அனுப்பிவைக்கலாம்.

(சி.11633)

## அரசாங்கக் கேள்வி அறிவித்தல்

### நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் மீளிணக்கத்துக்கான அமைச்சினால் யாழ்மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் சிவப்பு நாட்டரிசி வழங்கலுக்கான கேள்வி கோரல்

1.யாழ்.மாவட்டத்தில் இலவச நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான 2005 ஏப்பிரல், மே, யூன் மாதங்களுக்கான நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான அரிசியை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள பதிவுசெய்யப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களிடமிருந்து கீழ்க் குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ. சங்கங் களுக்கென எதிராகக் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளில் நேரடியாக விநியோகிப் பதற்கானகேள்விகள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள. ப.நோ.கூ.சங்கங்களிடம் (வரவுள்ளது)இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஒவ்வொரு ப.நோ.கூ.சங்கத்திற்கும் வழங்கப்படவேண்டிய தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இவைகளில் அளவு மாற்றங்கள் ஏற்படு மிடத்து அவை அவ்வப்போது அறிவிக்கப்படும்.

| இல | ப.நோ.கூ.சங்கம் | அரிசியின் அளவு | | |
|---|---|---|---|---|
| | | 2005 ஏப்ரல் (MT) | 2005 மே (MT) | 2005 யூன் (MT) |
| 01. | சாவகச்சேரி | 90 | 90 | 90 |
| 02. | கைதடி | 30 | 30 | 30 |
| 03. | கொடிகாமம் | 135 | 135 | 135 |
| 04. | உடுப்பிட்டி | 10 | 10 | 10 |
| 05. | கட்டைவேலி-நெல்லியடி | 10 | 10 | 10 |
| 06. | பருத்தித்துறை | 40 | 40 | 40 |
| 07. | புலோலி | 10 | 10 | 10 |
| 08. | மருதங்கேணி | 10 | 10 | 10 |
| 09. | யாழ்ப்பாணம் | 85 | 85 | 85 |
| 10. | நல்லூர் | 25 | 25 | 25 |
| 11. | அச்சுவேலி | 30 | 30 | 30 |
| 12. | நீர்வேலி | 30 | 30 | 30 |
| 13. | மானிப்பாய் | 20 | 20 | 20 |
| 14. | பண்டத்தரிப்பு | 20 | 20 | 20 |
| 15. | அளவெட்டி-மல்லாகம் | 10 | 10 | 10 |
| 16. | தெல்லிப்பளை | 75 | 75 | 75 |
| 17. | சங்கானை | 40 | 40 | 40 |
| 18. | சுன்னாகம் | 30 | 30 | 30 |
| 19. | புங்குடுதீவு-நயினாதீவு | 20 | 20 | 20 |
| 20. | வேலணை | 20 | 20 | 20 |
| 21. | ஊர்காவற்றுறை | 30 | 30 | 30 |
| 22. | காரைநகர் | 20 | 20 | 20 |
| 23. | தீவகம் | 05 | 05 | 05 |
| 24. | நெடுந்தீவு | 05 | 05 | 05 |
| | மொத்தம் | 800 | 800 | 800 |

2.கேள்விப்பத்திரத்தில் கோரப்பட்ட முழுத்தொகையையோ அல்லது பகுதியையோ கொள்வனவு செய்வதென்பது தேவைக்கேற்ப அரச அதிபரினால் தீர்மானிக்கப்படும்.

3.கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்பும் ப.நோ.கூ. சங்கங்கள் மீளளிக்க முடியாத கேள்விவைப்பாக ரூபா.500 /= ஐ யாழ்.மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் செலுத்தி, கேள்விப்படிவங் களையும், கேள்விஆவணங்களையும் 2005.04.11 ஆம் திகதி தொடக்கம் 2005.04.26 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் முற்பகல் 10.00 மணிதொடக்கம் பிற்பகல் 3.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். இவ்வசதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட ப.நோ.கூ.சங்கங்களைப் பொறுத்தவரையில் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபருடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளன.

4.மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூ.500/= ஐ அந்தந்த மாவட்ட செயலகத்தில் செலுத்தி அரசாங்க அதிபரிடமிருந்து கேள்விப் படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

5.கேள்வி கோரப்படவுள்ள அரிசி, புழுங்கல் அரிசியாக இருத்தல் வேண்டும். என்பதுடன் அவை கேள்விபற்றிய ஆவணத்தில் தெரிவிக்கப் பட்ட நிபந்தனைகளைக் கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.

6.பூரணப்படுத்திய இரு கேள்விப்படிவங்களை தலைவர், மாவட்டக் கேள்விச்சபை, மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீளத் தபால் உறையில் நேரடி யாகவோ, தபால் மூலமாகவோ யாழ்.செயலக மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலக (கணக்காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் 27.04.2005 பி.ப 2.00 மணிக்கு முன்பாக சேர்த்தல்வேண்டும். அன்றைய தினம் பி.ப 3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விகாரர் அல்லது அவரது எழுத்துமூலமான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமூகமளிக்கமுடியும்.

7.கேள்விப்பத்திரத்தின் தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் "சிவப்பு நாட்டரிசி வழங்குவதற்கான கேள்வி" என எழுதப் படல் வேண்டும்.

8.கேள்விகாரர்கள் (BIDDERS) குறிப்பிட்ட ப.நோ.கூ.சங்கங்களில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைக்கு தமது கேள்விகளைச் சமர்ப்பிப் பதற்கும், அச்சகங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ்வேறான விலை களை குறிப்பிடுவதற்கும் அருகதை உடையவர்களாவர். ஒவ் வொரு ப.நோ.கூ. சங்கத்திற்கும் விநியோகிக்கப்படவேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாகக் கருதப்படும்.

9.ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விதாரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10 வீத மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக செயற்படுத்தல் முறிக்காக (ferformante Bond) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும்.

10. கேள்விகள் பரிசீலனை செய்யப்படும் பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளில் விநியோகத்திற்கான விலை மாவட்ட விலை நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக இருத்தல் கூடாது. மாவட்டவிலைநிர்ணயம் செய்யப்படும் பொழுது விநியோக விலை சந்தை விலையிலும் பார்க்க எக்காரணம் கொண்டும் அதிகமாக இருக்க மாட்டாது.

11. கேள்விவிண்ணப்ப இறுதித் திகதியில் இருந்து கேள்விகள் 30 நாட்களுக்கு வலுவுடையதாக இருக்கும்.

க.கணேஷ்,
தலைவர் அரச அதிபர்,
மாவட்ட கேள்விச்சபை /மாவட்டச் செயலகம்
யாழ்ப்பாணம்.
11.04.2005.

(சி.11632)

# மூளை நோயாளியை போப் குணப்படுத்தினார் அதிசயம் நடந்ததாக தனிச்செயலாளர் தகவல்



அடுத்த பாப்பரசராக வர முழுத் தகுதியையும் பெற்றிருப்பவரான 71 வயது கர்தினால் ஜியோவன்னி பட்டிஸ்டா ரீ வத்திக்கானிலுள்ள சென் பீற்றர்ஸ் தேவாலயத்தில் நடைபெற்ற வழிபாட்டு நிகழ்வொன்றில் கலந்து கொண்டமை.



(வத்திக்கான்)

**மறைந்த போப்பாண்டவர் இரண்டாம் ஜோன்போலின் இறுதிச் சடங்கு கடந்த எட்டாம் திகதி நடந்தது. அப்போது போப்பாண்டவருக்கு புனிதர் பட்டம் வழங்க வேண்டும் என்று போலந்து நாட்டைச் சேர்ந்தவர்கள் குரல் கொடுத்தார்கள்.**

**வழக்கமாக மூன்று அதிசயங்களைச் செய்தவர்களுக்குத்தான் புனிதர் பட்டம் வழங்கப்படும். இந்த நிலையில் போப்பாண்டவர் ஒரு மூளை நோயாளியைக் குணப்படுத்திய அதிசயம் செய்து இருப்பதாகத் தகவல் வெளியாகியிருக்கிறது.**

போப்பாண்டவரின் தனிச் செயலாளராக இருந்து வந்தவர் பேராயர் ஸ்டெனிஸ்லா திசிவிஸ். கடந்த 40 ஆண்டுகளாக இவர்போப்பாண்டவருடன் நெருக்கமாக இருந்துவந்தார். இவர்தான் போப்பாண்டவர் அதிசயம் செய்ததாகக் கூறியிருக்கிறார்.

கடந்த 1998ஆம் ஆண்டு பேராயர் ஸ்டேனிஸ்லாவுக்கு அறிமுகமான ஒருவர் என்னிடம் பேசினார். அப்போது அவரது அமெரிக்க நண்பர் ஒருவர் மூளைக்கட்டி நோயால் பாதிக்கப்பட்டு சாகும் தருவாயில் இருப்பதாகத் தெரிவித்தார்.

அவர் சாகும் முன்பு போப்பாண்டவரைச் சந்திக்க வேண்டும், இயேசு கிறிஸ்து பிறந்த ஜெருசலேம் நகருக்குச் செல்ல வேண்டும். பின்னர் அமெரிக்கா திரும்பிச் சென்று சாக வேண்டும் என்று மூன்று ஆசைகளை வைத்து இருக்கிறார்.

அதில் போப்பாண்டவரைச் சந்திக்க ஏற்பாடு செய்து தரும்படி என்னிடம் கேட்டார். உடனே நான் அந்த நோயாளி நபரைச் சந்தித்தேன். அவரது முகமே அவர் நோயாளி என்பதைக் காட்டியது. அவரது தலையில் ஒருமுடியும் இல்லை. அவருக்கு அளிக்கப்படும் சிகிச்சை பலன் இல்லாமல் இருப்பது தெளிவாகத் தெரிந்தது.

அப்போது போப்பாண்டவர் றோம் நகருக்கு வெளியே இருந்தார். அவரை நான் தொடர்பு கொண்டு பேசினேன். இதையடுத்து கத்தோலிக்க மத வழக்கப்படி சாகும் தருவாயில் இருக்கும் அந்த நோயாளிக்காக போப்பாண்டவர் சிறப்புத் திருப்பலி ஒன்றை நடத்தினார். சிலமணி நேரம் கழித்து எனக்கு அறிமுகமானவர் தொலை பேசியில் என்னைத் தொடர்பு கொண்டார்.

அப்போது அமெரிக்க நோயாளி நண்பரின் மூளை கட்டி நோய் சில மணி நேரத்திற்கு முன்பு காணாமல் போய்விட்டதாகவும், தற்போது அவர் முழு நலனுடன் இருப்பதாகவும் தெரிவித்தார். இதை நான் கடவுளின் செயல் என்று அப்போது நினைத்தேன். ஆனால், மூன்று ஆண்டுகளுக்கு முன்பு போப்பாண்டவரால் இந்த அதிசயம் நிகழ்த்தப்பட்டது என்பதை உணர்ந்து வெளிப்படுத்தினேன் என்றார்.

இதனால், போப்பாண்டவருக்கு புனிதர் பட்டம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்திருக்கிறது. இதற்கு மூன்று வழி முறைகள் கடைப்பிடிக்கப்படுகிறது. முதலில் ஒருவரைப் புனிதராக அறிவிக்க அவர் பிறருக்கு முன் மாதிரியாக வாழ்ந்து காட்டவேண்டும்.

இரண்டாவது அவர் அதிசயம் செய்து இருக்க வேண்டும். அப்போது அவர் புனிதப்படுத்துதல் நிலையை அடைவார். மூன்றாவது மேலும் ஒரு அதிசயம் செய்தால் அவர் புனிதர் என்று அறிவிக்கப்படுவார். இந்தப் பிரச்சினை தொடர்பாக வத்திக்கான் செய்தித் தொடர்பாளர் கூறும்போது புதிதாக தேர்வு செய்யப்படும் போப்பாண்டவர் இது குறித்து முடிவு செய்வார் என்று தெரிவித்தார்.

இதற்கிடையே மெக்சிகோ நாட்டைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் தன்னைப் போப்பாண்டவர் குணப்படுத்தி இருப்பதாகக் கூறியிருக்கிறார். தனக்குப் 15 வயதாக இருக்கும்போது லீயுகிமியா நோயால் பாதிக்கப்பட்டு இருந்த தாகவும், அது போப்பாண்டவரால் குணப்படுத் தப்பட்டதாகவும் தெரிவித்திருக்கிறார்.

இன்னொருவர் கொலம்பியாவைச் சேர்ந்த கன்னியாஸ்திரி ஆவார். இவர் தெரிவிக்கும் போது, தனது நிலை தடுமாற்ற நோயைப் போப்பாண்டவர் குணப்படுத்தினார் என்று தெரிவித்திருக்கின்றார்.

## போர் நிறுத்தத்தை மீறியது இஸ்ரேல்; காசாவில் மூன்று இளைஞர்கள் பலி

(காசா)

இஸ்ரேலுக்கும், ப லஸ்தீனத்திற்கும் இடையே போர் நிறுத்தம் ஏற்பட்டு அது நடைமுறையில் உள்ள நிலையில் பலஸ்தீனிய இளைஞர்கள் மூன்று பேரை இஸ்ரேல் இராணுவம் சுட்டுக் கொன்றுள்ளது. அவர்கள் மூன்று பேரும் 14 முதல் 16 வயதுக்கு உட்பட்டவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் யூதர்கள் குடியிருப்பின் மீது தீவிரவாதிகள் றொக்கட் தாக்குதலை நடத்தினர்.

இந்தச் சம்பவம் காசாவில் நடந்தது. இதைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டுள்ளது. போர் நிறுத்தத்தை கைவிடப் போவதாக பலஸ்தீனத் தீவிரவாதிகள் மிரட்டியுள்ளனர்.


கடந்த மார்ச் மாதம்தான் பலஸ்தீன அதிபர் அப்பாஸ் உடன் போர் நிறுத்தத்துக்கு தீவிரவாதிகள் சம்மதம் தெரிவித்தனர்.

## நேபாளத்தில் தொடர் தாக்குதல்; 97 தீவிரவாதிகளின் சடலம் மீட்பு

(காத்மண்டு)

நேபாளத்தில் கடந்த மூன்று தினங்களுக்கு முன்பு மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுக்கும், அரசுப் படைகளுக்கும் நடந்த சண்டைக்குப் பிறகு 97 தீவிரவாதிகளின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தகவலை நேபாள இராணுவம் தெரிவித்துள்ளது. கடந்த வியாழக்கிழமை ருகும் மாவட்டத்தில் இராணுவ முகாம் மீது சுமார் நான்கு ஆயிரம் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினர். இதில் அரசுப் படையினரும் தீவிர எதிர்த்தாக்குதல் நடத்தினர். இதன்போதே இவர்கள் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.



பங்களாதேஷ் தலைநகர் டாக்காவுக்கு அண்மையில் நேற்று ஆடைக் கைத்தொழிற்சாலை கட்டடம் இடிந்து விழுந்ததில் பலியானவர்களின் உடல்களை மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ள படையினரையும், வயோதிபப் பெண் ஒருவருக்கு ஆறுதல் கூறும் படை வீரர் ஒருவரையும் காணலாம்.

## கச்சா எண்ணெய் பெரலுக்கு 50 டொலர் இருந்தாலே கட்டுபடியாகும்– ஒபெக்

(சிட்னி)

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை பெரலுக்கு 50 டொலாராக இருக்கும் இந்த விலை இருந்தால்தான் கச்சா எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளுக்குக் கட்டுப்படியாகும் என 'ஒபெக்' பொதுச் செயலாளர் அட்னன் ஷிகாப்- எல்டின் கூறியுள்ளார்.

சர்வதேச அளவில் பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்யும் வகையில் உற்பத்தியை அதிகரிக்க வேண்டியுள்ளது. அதற்காகக்கூடுதலாக முதலீடு செய்ய வேண்டிய அவசியமுள்ளது. எனவே கச்சா எண்ணெய் விலையைப் பேரலுக்கு 50 டொலர்கள் என்ற அளவில் விற்பனை செய்வதைத்தான் ஒபெக் உறுப்பு நாடுகள் விரும்புகின்றன அதுதான் கட்டுப்படியான விலையாகும். கச்சா எண்ணெய் தட்டுப்பாடு வந்துவிடுமோ என்ற பயத்திலும், விலை இன்னமும் ஏறி விடுமோ என்ற பயத்திலும்தான் சர்வதேச சந்தையில் பெரலுக்கு 50 டொலர்களிலிருந்து 60 டொலர்கள் வரை விலை போகிறது. இது தேவையில்லாத அச்சம். கச்சா எண்ணெய் உற்பத்தியில் எந்தப் பிரச்சினையுமில்லை அதை இறக்குமதி செய்யும் நாடுகளின் சுத்திகரிக்கும் திறன்தான் குறைவாக இருக்கிறது எனக் கூறியுள்ளார் எல்டின்.



ஆசிய பசுபிக் சர்வதேச அழகிப் போட்டி சீனாவில் உள்ள காங்டாங் மாகாணத்தில் நடந்தது. கோஸ்டாரிக்கா நாட்டைச் சேர்ந்த லியனோரா ஜெம்னிஸ் மோங்கே அழகிப் பட்டம் வென்றார்.

## ஈராக்கில் பாகிஸ்தான் தூதர்மாயம்

ஈராக்கில் பணியாற்றி வரும் பாகிஸ்தான் தூதர் மாயமாகி விட்டார் என்ற செய்தி அங்கு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அவரது நிலை என்ன என்பதும் தெரியவில்லை.ஈராக்கில் செயற்பட்டு வரும் தீவிரவாதிகள், வெளிநாட்டினரைக் கடத்துவதை அரசியல் கருவியாகப் பயன்படுத்தி வருகிறார்கள். கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் இதுவரை 200 வெளிநாட்டினர் பணயக் கைதிகளாகச் சிறைப்பிடிக் கப்பட்டுள்ளனர்.கிரிமினல்களும் பணம் பறிப்பதற்காக இப்படிக் கடத்தலில் ஈடுபடுகிறார்கள் கடத்தப்பட்டவர்களை தீவிரவாதிகளிடம் விற்றுவிடுகிறார்கள்.

கடந்த மார்ச் மாதம் 28 ஆம் திகதி மூன்று ருமேனிய நிருபர்களும், ஒரு அமெரிக்க வழிகாட்டியும கடத்தப்பட்டனர். இந்த நிலையில் பாகிஸ்தான் தூதர் ஒருவர் திடீர் என்று காணாமல் போய் இருக்கிறார். மாலிக் முகமது ஜாவீத் என்பது அவர் பெயர் ஆகும். தொழுகை நடத்துவதற்காக மசூதிக்குச் சென்றவர் வீடுதிரும்பவில்லை. அவர் கடத்தப்பட்டு இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

## ஐ.நா. அலுவகம் மீது பாக்கில் குண்டு வீச்சு

(குவெட்டா)

பாகிஸ்தான் பலூஸ்சிஸ்தான் தலைநகரான குவெட்டா நகரில் அமைந்துள்ள ஐ.நா அலுவலகம் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலுக்கு யார் காரணம் என்பது இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை பொலிசார் விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

# கலாச்சாரப் பேரவையை உருவாக்க வவுனியா மாவட்டத்தில் நடவடிக்கை

## இன்று முன்னோடிக் கலந்துரையாடலுக்கு ஏற்பாடு

(வவுனியா செய்தியாளர்)

**வவுனியா மாவட்டத்தில் கலாச்சார பேரவை ஒன்றை உருவாக்குவதற்கான ஏற்பாடுகளை வவுனியா மாவட்ட அரச அதிபர் சி.சண்முகம் மேற்கொண்டு வருகின்றார்.**

வவுனியா மாவட்டத்தில் கலை இலக்கிய கலாச்சார விழிப் புணர்வை ஏற்படுத்தும் முகமாகவும், இலை மறைகாயாகவுள்ள கலைஞர்களையும், இலக்கிய ஆர்வலர்களையும் வெளிக் கொணர்ந்து ஊக்குவிக்கும் முகமாகவும், மறைந்து போகும் நிலையில் உள்ள எமது கலாச்சாரங்களைப் புத்துயிர்ப்புச் செய்வ தற்காகவும், பிரதேசக் கலாச்சார நடவடிக்கைகளை ஒன்றிணைப்பதற்காகவும், வவுனியா மாவட்டத்தில் கலாச்சாரப் பேரவையினை அமைப்பது இன்றியமையாத தேவையாகக் கருதப்படுகின்றது.

இப் பேரவையை உருவாக்குவது தொடர்பான முன்னோடிக் கலந்துரையாடல் ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வவுனியா அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்குமாறு கலை இலக்கிய ஆர்வலர்களை வவுனியா அரச அதிபர் சி.சண்முகம் கேட்டுள்ளார். (10)

# காய்கறிகள் விலை வீழ்ச்சி விவசாயிகள் பெரிதும் பாதிப்பு

யாழ். குடாநாட்டில் காய்கறிகளின் விலை சடுதியாக வீழ்ச்சி கண்டிருப்பதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக கத்தரிக்காய், பயிற்றங்காய், தக்காளி,கோவா, புடோல், பூசணிக்காய், போன்றவற்றின் விலை கிலோ ஒன்றிற்கு 10 தொடக்கம் 15 ரூபாவுக்கு உட்பட்டு காணப் படுகிறது.

மேற்படி காய்கறிப்பயிர்களை அதிகளவிலான யாழ். குடா நாட்டு விவசாயிகள் சமகாலத்தில் பயிர் செய்திருப்பதே இவ் விலை வீழ்ச்சிக்குரிய காரணம் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது(33)

# விண்ணப்பம் கோரல்

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் நிறைவேற்று அதிகாரிகள் தரம் III,IV பதவிகளுக்கான விண்ணப்பங்கள் பட்டதாரிகளிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் பட்டதாரிகள் தமது விண்ணப்பங்களை தேசிய போக்குவரத்து ஆணைக் குழு, இல- 241, பார்க்வீதி ,கொழும்பு-5 என்ற முகவரிக்கு எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளது. (33)

# அன்னை பூபதி ஞாபகார்த்த விவாதச் சுற்றுப் போட்டி

யாழ். மாவட்ட மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் அன்னை பூபதி வெற்றிக் கிண்ணத்திற்காக பாடசாலை அணிகளிற்கிடையில் நடாத்தப்பட்ட மாபெரும் விவாதச் சுற்றுப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமையன்று யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற்றது.

மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரையின் வாழ்த்துரையுடன் இப் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டன. இப்போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, மத்திய கல்லூரி, பரியோவன் கல்லூரி, யாழ்ப் பாணக் கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி ஆகியன பங்கு பற்றின.

இதில் மூன்றாம் இடத்தினை வேம்படி மகளிர் கல்லூரி பெற்றுக் கொண்டது. இறுதிப் போட்டிக்கு யாழ். மத்திய கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியன தெரிவு செய்யப்பட்டுள்ளன. இப் போட்டிக்கான ஆதரவினை யாழ்ப்பாணம் வணிகர் கழகம் வழங்கியுள்ளது. (36)

# மன்னார் அரசியல்துறைப் பணிமனையில் தொழிற் சங்கங்களின் இணைய ஒன்றுகூடல்

## -நடப்பு செயற்பாடுகள் குறித்து ஆலோசனை

(மன்னார்)

மன்னார் சமாதான செயலகத்தில் உள்ள அரசியல் துறையினரின் பணிமனையில் தொழிற் சங்கங்களின் இணைய பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

காலை 10.00 மணிக்கு இடம் பெற்ற இக் கூட்டத்திற்கு இணையத் தின் செயலாளர் இரத்தினசிங்கம் தலைமை வகித்தார். அகவணக்கத் துடன் ஆரம்பமான இக் கூட்டத்தில் இணையத்தின் செயலாளரால் விளக் கவுரை வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இணை யத்தின் பொறுப்பாளர் ஈழப்பிரியன் கருத்துத் தெரிவிக்கையில்; இச் சங்கத்தில் உள்ளவர்கள் பொறுப் புணர்வுடன் செயற்பட வேண்டு மெனவும் இச் சங்கத்தினை எதிர் காலத்தில் நல்ல முன்னேற்றமான பாதையில் கொண்டு செல்வது உங் களது கடமை எனவும் தெரிவித்தார்.

தொடர்ந்து மன்னார் அரசியல் துறையினரின் நிர்வாகப் பொறுப்பாளர் முடியரசன் கருத்துத் தெரிவிக் கையில; தேசத்திற்காக உழைக்க வேண்டிய கடமைப்பாடு அனை வருக்கும் உண்டெனவும், நிர்வாகக் கட்டமைப்பை நல்ல முறையில் ஏற்படுத்தி இணையத்தின் மூலமாக மாவட்ட அபிவிருத்திக்கு உதவி செய்ய வேண்டும் எனவும் கூறினார். மேலும் இக் கூட்டத்தின் போது அன்னை பூபதியின் நினைவு தினம் சம்பந்தமான ஒழுங்கமைப்பு தொடர் பாகவும் கலந்துரையாடப்பட்டது. (18)

# அம்பாறையில் சுனாமி பாதித்த பகுதிகளில் முன்பள்ளி கல்வி மேம்பாடு குறித்து ஆராய்வு

## -முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றம்

அம்பாறை மாவட்டத்தில் சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியுள்ள இடைத்தங்கல் முகாம் கள், நலன்புரி நிலையங்களிலுள்ள முன்பள்ளிப் பாலகர்களது அறிவு ஆற்றல் விருத்திக்கும், மகிழ்ச்சி கரமான கற்றல் சூழலுக்கும் பொருத் தமான செயற்றிட்டங்களை நிறை வேற்றுவது தொடர்பான ஒன்று கூடல் அண்மையில் அட்டாளைச்சேனை மத்திய கல்லூரி கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் அசீஸ் தலைமையில் அக்கரைப்பற்று கல்வி வலய முன்பள்ளி கல்வி மேம்பாட்டு தலைவரும், மாவட்ட உப தலைவரு மான சாகூல்கமீட் நெறிப்படுத்தலில் இது இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையம் ஒழுங்கு படுத்திய இந்நிகழ்வில் மாவட்ட இணைப்பாளர் செல்வி. தயாழினி, வடக்குக் கிழக்கு மாகாண முன் பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய செயலாளர் கணேசலிங்கம், மாவட்டப் பொருளாளர் திருமதி ஜி.எம்.ஸ்மைல், போரூட் நிறுவன மட்டு. அம்பாறை இணைப்பாளர் எம்.ரி.எம்.கனிபாஸ், கல்முனை சமாதான அமைப்பு செய லாளர் பி.ராஜீ, கல்முனை பொதுச் சுகாதார பணிமனை சிரேஷ்ட பொதுச் சுகாதார பரிசோதகர் குணாஷ்கம், அட்டாளைச்சேனை ம.ம.வித்தியாலய அதிபர். எ.சி.சாயுதீன், கல்முனை வலயப் பிரதேச கல்விப் பணிப்பாளர் செல்வி. எஸ்.எச்.எம்.எம்.ஏ.காதர், ஆசிரிய ஆலோசகர் எ.எல். சகாப், அம்பாறை மாவட்ட சிறுவர் பாது காப்பு உத்தியோகத்தர் எம்.ஏ.ஏ. வாஸ்வதீன், கல்முனை மாவட்ட பகல் பராமரிப்பு நிலைய ஒன்றியத் தலைவர் ஏ.எல். ஆர்.றபீக் பேதாவஸ், ஸ்வோட் நிறுவனங்களைச் சேர்ந்த எம்.மாலினி ஆகியோருடன் மேலும் 18 உள்ளூர் அரசசார்பற்ற நிறு வனங்களைச்சேர்ந்த பிரதிநிதிகளும், முன்பள்ளிகளை நிர்வகிக்கும் பிரதி நிதிகளும் கலந்துகொண்டு தமது கருத்துக்களை வெளிப்படுத்தினர்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையம் போரூட் நிறு வனத்துடன் இணைந்து இங்குள்ள முன்பள்ளி கல்வி அபிவிருத்தி இணைப்பாளர்கள் 18 பேருக்கு வழங்கப்பட்ட 21 நாள் பயிற்சி நெறிக ளின் பின்புதான் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய கல்வி குறித்து ஓர் விழிப்புணர்வு தோன்றியது என்றும், தொடர்ந்து சிறுவர் பாதுகாப்பு அமைப்பு மூலமும், தமிழர் புனர் வாழ்வுக்கழகம் மூலமும் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையம் முன் னெடுத்த பயிற்சிகளினால் மேலும் முன்பள்ளிக்கல்வி குறித்த விழிப் புணர்வு சமூகத்தில் அதிகரித் துள்ளதை நாம் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளவேண்டும் எனவும் அக் கரைப்பற்று வலய முன்பள்ளி உத விக்கல்விப் பணிப்பாளரும், முன் பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய மாவட்டக் கட்டமைப்பின் உப தலை வருமான சாகூல் கமீட் தனது உரை யில் குறிப்பிட்டார்.

முன்பள்ளிக் கல்வி அபி விருத்திக்கான பொதுவான ஒரு கட் டமைப்பு தேவைப்படுவதனால் முன் பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத் துடன் இணைந்து ஒரு செயற்றிட்டக் குழுவை நியமித்தல் இவ் ஒன்று கூடலுக்கு வருகை தராத முன் பள்ளிகளை நிர்வகிக்கும் நிறு வனங்களும் பங்கேற்கும் வகையில் ஏப்ரல் 23 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு இதே மண்டபத்தில் ஒன்று கூடி சகல முன்பள்ளிகளினதும் விபரங்களை தொகுத்தலும் செயற் திட்டங்களை இனங்காணலும் இடம் பெற வேண்டும்.

வடக்கு கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சில் சகல முன்பள்ளிகளும் பதிவு செய்யப்பெற்று அதற்கான பதிவு இலக்கத்தினைப் பெற்றி ருத்தல் வேண்டும் ஆகிய தீர் மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

# 13 ஈழத்தமிழ் அகதிகள் தலை மன்னார் வருகை

(மன்னார்)

இந்தியாவில் இருந்து தலை மன்னார் ஊடாக நேற்று முன்தினம் பதின் மூன்று ஈழத்தமிழ் அகதிகள் தாயகம் திரும்பியுள்ளனர்.

பாண்டிச்சேரி, விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள முத்துப்பேட்டை கீழ்ப்பற்று, ஊத்தூர் ஆகிய இடங்களிலுள்ள அகதிமுகாம்களில் இருந் தவர்களே தாயகம் திரும்பியுள்ளனர்.

இவர்களை தலைமன்னார் பொலிசார் மன்னார் பதில் நீதவான் முன் னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து நீதவான் அவர்களது சொந்த இடமான நெல்லியடி, யாழ்ப்பாணம், கோவில்குளம், வவுனியா, தலைமன்னார், நானாட்டான் ஆகிய இடங்களுக்கு கிராம உத்தியோகத்தர்கள் மூலம் அனுப்பிவைக்க உத்தரவிட்டார். (18)

# பாண்டியன்குளம் பிரதேசத்தில் மாதாந்த வீரமுரசு நிகழ்வு

(மல்லாவி)

பாண்டியன் குளம் பிரதேசத்தின் அம்பாள்புரம் கிராமத்தில் மாதாந்த வீரமுரசு நிகழ்வு அம்பாள்புரம் பொது நோக்கு மண்டபத்தில் கடந்த புதன் கிழமை இடம்பெற்றது.

இரவு 7.00 மணிக்கு வன்னி விளாங்குளம் ஊரக தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் தி. கிருஸ்ண மூர்த்தி தலைமையில் நிகழ்வுகள் இடம் பெற்றன.

நிகழ்வில் பொதுச் சுடரினை வன்னி விளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் வளவன் ஏற்றி வைத்ததைத் தொடர்ந்து, 28 மாவீரர் களின் பெற்றோர்களால் ஈகைச்சுடர் ஏற்றி மலர் மாலைகளும் அணி விக்கப்பட்டது. மலர் வணக்கம், அக வணக்கம் என்பன இடம்பெற்றதைத் தொடர்ந்து அரங்க நிகழ்வுகளில் வரவேற்பு நடனத்தை வன்னி விளாங்குளம் அ.த.க பாடசாலை மாணவிகள் நிகழ்த்தினர்.

கருத்துரைகளை அம்பாள்புரம் அரசியல்துறை வலயப் பொறுப் பாளர் செந்தூரன், வன்னிவிளாங் குளம் அ.த.க பாடசாலை முதல்வர் திருமதி. அ.சிறிஸ்கந்தராசா துணுக் காய் பிரதேச அரசியல் துறை நிர் வாகப் பொறுப்பாளர் கெ.புனிதன் ஆகியோர் வழங்கினர் தொடர்ந்து பாடசாலை மாணவர்களின் நடனம், கவிதைகள் என்பனவுடன் கொல்ல விளாங்குளம் நாககன்னி நாடக மன்றத்தினரின் வன்னிமண் எனும் நாடகமும் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பொது அமைப் புக்களின் பிரதிநிதிகள் நன்னீர் மீன் பிடிச் சங்கத்தினர் பொருண்மிய மேம் பாட்டு நிறுவனப் பிரதேசப் பொறுப் பாளர் பொதுமக்கள், போராளிகள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்(24)

# ரி-56 ரக துப்பாக்கியுடன் முஸ்லிம் குடும்பஸ்தர் கைது

(ஏறாவூர்)

மட்டக்களப்பு ஏறாவூரிலுள்ள மிச் நகரில் முஸ்லிம் குடும்பஸ்த ரொருவர் ரி-56 ரக துப்பாக்கியை சட்ட விரோதமான முறையில் மறைத்து வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சனிக்கிழமை அதிகாலை சிறிலங்காப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அப்துல் ஹமீட் ரஹுமத்துல்லா ரகுமான் (வயது -29) எனப்படும் குறிப்பிட்ட நபரது வீட்டில் ஆயுதம் மறைத்து வைத்திருக்கப்பட்டிருப்ப தாக கிடைத்த இரகசியத் தகவலையடுத்து சனிக்கிழமை அதிகாலை இவரது வீட்டில் தேடுதல் நடத்திய பொலிசாரினால் ரி-56 ரக துப்பாக்கி யொன்றும், இரண்டு மகசீன்களும், அதற்கான 60 ரவைகளுடன் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. பொலிஸ் விசாரணையில் இவ் ஆயுதத்தினை விறகு வியாபாரியொருவரிடம் ஐயாயிரம் ரூபாவிற்கு கொள்வனவு செய்த தாக இவர் தெரிவித்துள்ளார். சனிக்கிழமை மாலை மட்டக்களப்பு மாவட்ட மேலதிக நீதிபதி எம்.எச்.எம்.அஜ்மீர் முன்னிலையில் இவர் ஆஜர்ப்படுத்தப்பட்டபோது எதிர்வரும் 25 ஆம் திகதி வரை இவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இப்படியே நாங்கள் முல்லைத்தீவுக்குள் போகமுற்படுகின்ற பொழுது அதில் நின்றவர்கள் எங்களை 'போகவேண்டாம்' என்று மறித்தார்கள். அதில் நின்ற காவல்துறை உறுப்பினர் "செல்வபுரம் பாதையூடாக போக ஏலாது சின்னத்தங்காட்டு பாலம் பாவனைக்கு உதவாதமாதிரி போச்சுது தண்ணி மேவிப்பாஞ்சு கொண்டிருக்குது இதால போக ஏலாதண்ணா" என்று சொல்லி மறித்து விட்டார். நாங்கள் வட்டுவாகல் பாலத்தின் ஊடாக முல்லைத்தீவுக்குள் போகின்ற போது பாலத்தால் எவரும் வரத்தொடங்கவில்லை. இவ்வளவு சனமும் இதுகளுக்கச் சிக்குப்பட்டுப் போய் இருக்கினம்: அவையள வெளியால எடுக்கிறதுக்கு ஒருபாதையும் திறபடுதில்லையே என்கின்ற ஆதங்கம் எனக்குள் எழுந்தது.

இப்படியிருக்க சின்னத்தங்காட்டு பாதையூடாக பயணம் செய்யக்கூடிய நிலை இல்லை என்று காவல்துறையினர் சொன்ன பிறகு அதில நிண்டு மினக்கடாமல் முல்லைத்தீவை சுற்றிப்போற பாதையால் போவம் என்று வெளிக்கிட்டம்.வெளிக்கிட்டபிறகுதான் நிலைமையை

இரண்டு மணித்தியாலங்களின் பின்னர் இதை விட பெரிய அலை வரும் என்று தான் நான் நினைத்தேன். நான் இரண்டு மணித்தியாலங்களின் பிறகு ஒரு பெரிய அலை வரும் என்று சிந்திப்பதற்கு ஒரு காரணம் இருந்தது.

சுனாமி அடிப்பதற்கு சில வாரங்களுக்கு முன்னர் தமிழ்ச்சஞ்சிகை ஒன்றில் "இந்தியாவின் தனுஸ்கோடி எப்படி அழிந்தது? " என்பது பற்றிய கட்டுரை ஒன்றைப் படித்தேன். அந்தக் கட்டுரையில் அறுபது வயது வயோதிபர் ஒருவர் சம்பவம் பற்றி கூறுகின்ற பொழுது முதல் அலை அடித்து இரண்டு மணிநேரத்தின் பிறகு ஒரு அலை வந்தடித்தது. அப்படி வந்த அலை தான் ஊரையே முழுமையாகத் துடைத்தழித்துக் கொண்டு போனது என்று குறிப்பிட்டிருந்தார்.

அந்தச் சம்பவத்தை வைத்து இரண்டு மணிநேரத்தின் பின்னர் வரப்போகும் பாரிய அலையைப் பற்றித்தான் எனது சிந்தனை இருந்தது. அதனால் எவ்வளவு விரை வாக முல்லைத் தீவுக்குள் போகமுடியுமோ அவ்

அந்தப்போராளி தண்ணிருக்குள்ளால் போய் 'ஒருவர் இறந்திருக்கிறார். அவரின் உடலை வைத்து இன்னொருவர் அழுது கொண்டிருக்கிறார்'. என்று எனக்கு விடயத்தை தெரியப் படுத்தினார்.

சம்பவத்தின் தன்மையைப் புரிந்து கொண்டு அதற்குரிய ஒழுங்குகளைச் செய்துவிட்டு வருமாறு கூறிவிட்டு நாங்கள் போய்க் கொண்டிருக்க கரைச்சிக்குடியிருப்பின் அடுத்தபாலத்தில் கடுமையாகத் தண்ணி பாய்ந்து கொண்டிருந்தது. அதனால் பாலத்தைக் கடக்க முடியாத நிலை இருந்தது.

எப்படிப்போவது என்று சிந்தித்தபடி இருக்க எனது தொலைத் தொடர்புக் கருவியில் முள்ளியவளைப்பக்கத்தில் இருந்தவர்கள் தொடர்பை ஏற்படுத்தி அந்தப்பகுதியினூடாக ஒரு பாதையைத்திறந்துவிட்டதாகவும், அதனால் தப்பியவர்கள், காயமடைந்தவர்கள் அனைவரையும் வேகமாக மீட்டுக் கொண்டிருப்பதாகவும் அறிவித்துக் கொண்டிருந்தார்கள்.

கரைச்சிக்குடியிருப்பு ஊர்மனை கட்டடங்கள் மரங்கள் எல்லாமே இடிந்தும் முறிந்தும் இருந்தன. எல்லாமே சிதைந்துபோய் தான் இருந்தன.

கடல் வந்துபோன உடனேயே நாங்கள் போனதால் எல்லா இடமும் ஒரு வித்தியாசமான பரிமாணத்தில் இருந்தது.கடல் செய்த கொடுமையை அந்த நிலத்தின் தடையங்கள் வெளிப்படுத்தின.

சில இடங்களில் தண்ணீர் தேங்கி நின்றது. கடலில் இருந்து வந்த அலைகள் நிலத்தை அறுத்தபடி மீண்டும் கடலை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. ஒவ்வொரு இடமாக பார்த்துக்கொண்டு போகின்ற பொழுதுதான் தாக்கத்தின் வீச்சை முழுமையாக அறியமுடிந்தது.

கன்ரர் ரக வாகனம் ஒன்று தண்ணியுடன் அடிபட்டுவந்து வீதியோரத்தில் உள்ள மரம் ஒன்றுடன் மோதி இரண்டாக முறிந்து போய்இருந்தது. அதேபோல் பஸ்வண்டிகளும் மரங்களுடன் மோதியபடிஇருந்தன. ஒரு பஸ்வண்டியைக் கிழித்துக்கொண்டு தண்ணீர்



**சுனாமி அடிப்பதற்கு சில வாரங்களுக்கு முன்னர்தான் "இந்தியாவின் தனுஸ்கோடி எப்படி அழிந்தது?" என்று தமிழ் சஞ்சிகை ஒன்றில் பிரசுரமாகியிருந்த கட்டுரை ஒன்றைப் படித்திருந்தேன். அதில் அறுபது வயது முதியவர் ஒருவர் அந்தச் சம்பவம் பற்றி கூறுகின்றபொழுது, முதல் அலை அடித்த இரண்டு மணி நேரத்தின் பிறகு அடித்த அலைதான் ஊரையே முழுமையாகத் துடைத்தழித்துக் கொண்டு போனது எனக் குறிப்பிட்டிருந்தார். அந்த அடிப்படையில்தான் நான் சிந்தித்தேன். சுனாமி அலைகள் இவ்வாறு விரைவாக அடித்து ஓய்ந்து விடும் என்று நான் அந்த நேரத்தில் சிந்தித்திருக்கவில்லை என ஆழிப்பேரலையால் சிதைந்து போன முல்லை. நகரின் நிலை எப்படி இருந்தது என்பது பற்றிய தனது அனுபவத்தை தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்ததளபதியும், புலனாய்வுத்துறைப் பொறுப்பாளருமான பொட்டுஅம்மான் அவர்கள் எம்மிடம் பகிர்ந்திருந்தார்.**

**அவர் பகிர்ந்ததன் தொடர்ச்சி இன்றும் பிரசுரமாகிறது.**



# இரண்டு மணித்தியாலங்களின் பிறகுதான் பெரிய அலைவரும் என்று நினைத்தேன்

பகுதி–49



## ஆழிப்பேரலைகள் முல்லையில் நடத்திய கோரத்தாண்டவம்

உணர்ந்து "வட்டுவாகல்பாலத்தில் வந்து அடைந்திருக்கிற மரங்களை எடுக்கவேணும். இல்லாவிட்டால் தண்ணி வந்து அடிக்கிற வேகத்தில பாலம் உடைஞ்சு போடும் போல இருக்கு. இதுவும் உடைந்தால் போக்குவரத்துத்தொடர்பு இல்லாமல் போய்விடும். அதால கிறையினைப் போட்டு எண்டாலும் பாலத்தில் அடைந்திருக்கிற மரங்களை எடுத்து விடுங்கோ" என்று பாலதாசிற்கு தொலைத் தொடர்புக்கருவியில் சொல்லி விட்டு சீரதிருத்தப் பிரிவுக்குப் பக்கத்தால் போய் முல்லைத்தீவை சுற்றிவருகின்ற தார்வீதியால் முல்லைத்தீவுக்குப் போய்ச் சேருவது என்று வெளிக்கிட்டுப் போய்க்கொண்டிருந் தோம்.

சுனாமிப் பேரலைகள் மூன்று தடவையும் இவ்வளவு விரைவாகவந்து விடும் என்று நான் சிந்திக்கவேயில்லை. எனது எண்ணப்படி

வளவு விரைவாக போய் அங்கிருப்ப வர்களைப் பாது காப்பாக பின்னுக்கு அனுப்ப வேண்டும். என்ற வேகத்துடன் நடந்துபோய்க் கொண்டிருந்தோம். ஒரு கட்டத்தில் வீதி தெரியாமல் தண்ணி மேவி ஓடிக்கொண்டிருந்தது. நாங்கள் தண்ணியைப் பொருட்படுத்தாமல் நடந்து போய்க் கொண்டிருந்தோம்.

இந்த இடத்திலும் எங்களை " போக வேண்டாம் தண்ணி இழுத்துப்போடும்" என்று மறித்தார்கள். ஆனாலும் முல்லைத்தீவுக்குள் இருக்கிற மக்கள் அனுபவிக்கின்ற பயங்கரத்தைவிட நாங்கள் இந்தத் தண்ணீருக்கள்ளால் போவது என்பது மிகவும் சாதாரண விடயம். என நினைத்தபடி அந்தப் பாதையால் நடந்து போய்க்கொண்டிருந்தோம். முதலில் கொஞ்சமாக இருந்த தண்ணி படிப்படியாக உயர்ந்து இடுப்பளவுக்கு வந்துவிட்டது. ஒருகட்டத்தில் தண்ணி இழுவையையும் உணர முடிந்தது.

கரைச்சிக்குடியிருப்பு பின் வீதியால் போய்க் கொண்டிருக்கின்றசமயம் ஒரு வீட்டினுள் இருந்து உதவி கேட்டு அவலக்குரல் ஒலித்துக் கொண்டிருந்தது. பெருமளவு தண்ணி இருந்ததால் எல்லோரும் போகமுடியாதநிலை ஏற்பட்டது. அதனால் எங்களுடன் வந்து கொண்டிருந்த புகழன் என்ற நீச்சல் தெரிந்த போராளியைத் தொடர்புடன் அனுப்பி னோம்.

களுக்குள்ளாக போய்க்கொண்டிருக்கின்ற பொழுது சுமார் இரண்டடி நீளமான கடல் மீன் ஒன்று கிடந்தது. அது வாளைமீனாக இருக்கவேண்டும். கடலையும் மீன் இருக்கின்ற இடத்தையும் ஒப்பிட்டுப்பார்க்கின்ற பொழுது தான் கடலிலிருந்து என்ன வேகத்தில் எவ்வளவு தண்ணி வந்திருக்கிறது என்ற தாக்கம்தெரிந்தது.

இந்தப்பாதையூடாக நாங்கள் முல்லைத் தீவை நோக்கிப் போய்க்கொண்டிருந்தபோது கடலலையில் சிக்கி உயிருக்காகப்போராடிக் கொண்டிருந்தவர்களையும், உயிர் தப்பியிருந்தவர்களையும் தேடிக்காப்பாற்றுகின்ற நடவடிக்கையில் கடற்புலி பெண்போராளிகள் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள்.கடல் அலைகளால் அடித்து நொருக்கப்பட்ட முல்லைத்தீவுக்குள் நாங்கள் கால்வைக்கும் பொழுது நேரம் பத்துப் பத்தரைமணிதான் இருக்கும்.



முல்லைத்தீவுக்குள் இருந்த கடற்படைப் போராளிகள் கணிசமாக மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். நாங்கள் உள்ளுக்குப் போன உடனே பெண் போராளிகள்தான் எங்களை 'வாங்கோ அண்ணா' என்று சொல்லிக் கூட்டிக்கொண்டு போனார்கள்.அவர்கள் நிலமைகளை ஒழுங்குபடுத்தத் தொடங்கி விட்டார்கள். அந்ததப்பகுதியில்நின்ற மீன்பிடி போட் ஒன்றில் காயமடைந்தவர்களையும் தண்ணிகுடித்து உயிருக்காகப் போராடிக்கொண்டிருந்தவர்களையும் வைத்திய சாலைக்கு ஏற்றி அனுப்பிக்கொண்டிருந்தார்கள்.

இப்படியாக நடைபெற்றுக்கொண்டிருந்த மீட்பு வேலைகள் அனைத்தையும் பார்த்தபடி நகரப்பகுதியின் அழிவுகளைப்பார்ப்பதற்காக நாங்கள் உள்ளே போய்க்கொண்டிருந்தோம்.

மறுபுறத்தால் போயிருந்தது. இந்தக்காட்சிகள் கடலில் இருந்து அலைவந்த வேகத்தை உணர்த்தின.

இவற்றை எல்லாம் பார்த்தபடி செந்தளிர் இல்லத்தை நோக்கிப்போனோம்.நாங்கள் போகின்ற பொழுது சிறுவர் இல்லத்திற்கு முன்னால் ஒரு பெண்மணியும் அவருடன் வேறு

அ.லோகீசன்

ஒருவருமாக இருவர் மோட்டார் சைக்கிளில் வந்து நின்றார்கள்.

அவர்களைப்பார்த்தவுடனே 'நீங்கள் ஆர்?' என்று கேட்டேன்.தான்தான் அந்த இல்லத்தின் பொறுப்பாளர் என்றும் வேறு வேலைக்காக வெளியே போயிருந்ததாகவும் சம்பவத்தை அறிந்து பிள்ளைகளைப்பார்ப்பதற்காக வந்ததாகவும் சொன்னார்.

'எத்தனை பிள்ளைகள் இருந்தார்கள்?' என்று கேட்டேன். 'நூற்றிஐம்பது பிள்ளைகளுக்கு மேல் இருந்தார்கள்" என்று சொன்னார். 'ஆரும் வெளியாலவந்தவையோ?" என்று கேட்டேன். 'என்ன மாதிரி எண்டு தெரியாது வெளியாலையும் போயிருந்தவையள் இப்பநானும் ஒருததரையும் காணேல்ல' என்று கூறினார்.

முல்லைத்தீவு நகருக்குள் சென்றுவி நிலையில் புலனாய்வுத்துறைப் பொறுப் பொட்டு அம்மான் அவர்களின் பார்வ பட்டவை குறித்து அடுத்த பகு தொடர்வார்.

தொட

# காஷ்மீர் விவகாரத்தை தவிர்த்து இந்தியா–பாகிஸ்தான் சமாதானம்...?




இந்தியாவும் பாகிஸ்தானும் மீண்டும் வழமை போலவே "பழைய குருடி கதவைத் திறவடி" என்று சமாதானம், சமத்துவம் என்று பேச ஆரம்பித்திருக்கின்றன. உலகத்தின் பார்வையை அடிக்கடி தமது பக்கம் திரும்ப வைப்பதில் இருநாடுகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்று தான் சொல்ல வேண்டும்!

அந்தவகையில் தற்போதும் இருநாடுகளும் உலகத்தின் பார்வையை தம்மீது பதிய வைத்திருக்கின்றன. ஆம்... இரு நாடுகளும் பேருந்து போக்குவரத்தை அண்மையில் ஆரம்பித்துள்ளன. அதுவும் இருநாடுகளும் தமக்கிடையே விட்டுக்கொடுக்க முடியாது என்று போராடிவரும் காஷ்மீர் - முசாபராபாத்துக்கிடையேயே போக்குவரத்தைத் தொடங்கியிருக்கின்றன.

அதுவும் ஒன்றல்ல இரண்டல்ல 57 ஆண்டு காலமாக இரு நாடுகளும் மூடி வைத்திருந்த பாதையினையே திறந்துவிட்டிருக்கின்றன. பேருந்து போக்குவரத்தைத் தொடக்கி வைத்திருக்கின்றன.

இதேவேளை எதிர்வரும் 16 ஆம் திகதி இந்தியாவுக்கு வரவிருக்கும் முசாரப் இந்திய- பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டியை பார்வையிடவுள்ளார். அதேநேரம் அவர் இருநாட்டு சமாதானம் குறித்தும் பேசவுள்ளதாக ஏற்கனவே சமிஞ்சை காட்டியுள்ளார். அதாவது முசாரப் காஷ்மீர் பிரச்சினை குறித்தே பேசவுள்ளார் என்றே எதிர்பார்ப்பு நிலவுகின்றமையினால் இந்தியா உஷாரடைந்துவிட்டது.

அதனால் தான் இந்தியா வரும் பாகிஸ்தான் சனாதிபதி எந்த விடயத்தையும் பேசமுடியும். எதனையும் விட்டுத்தருமாறு கேட்க முடியும் ஆனால் ஒன்றே ஒன்றைத் தவிர அது காஷ்மீர் விவகாரம் என்று இந்திய வெளியுறவுச் செயலர் நட்வர்சிங் எச்சரிக்கை மணி அடித்திருக்கின்றார்.

ஆக, இரு நாடுகளும் சமாதானம் சமாதானம் என்று வாய் கிழியக் கத்திக்கொள்வதெல்லாம் வெறும் வாய்ச்சவடாலே. பேருந்து சேவையினால் மட்டும் சமாதானத்தை எட்டிப் பிடித்து விட முடியாது என்பது இருநாடுகளுக்கும் விளங்காத விடயமல்ல.

ஆனாலும், உலகத்துக்காக, உலக வாயை அடைப்பதற்காகவே இரு நாடுகளும் அடிக்கடி சமாதானம் பற்றிப் பேசுகின்றன என்று தான் கூறவேண்டியுள்ளது. உண்மையும் அது தான்! இல்லையேல் இருநாடுகளும் எப்போதோ சமாதானத்தை எட்டிப்பிடித்திருக்க முடியும் என்றே நம்பத்தோன்றுகின்றது.

இந்தியா கொட்டும் மழையையும், பொருட்படுத்தாது கொடியசைத்து பேருந்து சேவையை ஆரம்பித்திருக்கின்றது. பேருந்து சேவைக்கு மட்டும் பச்சைக்கொடி காட்டியுள்ள இந்தியா, காஷ்மீர் விவகாரத்தில் மட்டும் சிவப்புக் கொடியைத் தான் இதுவரை காட்டி வருகின்றது.

இதேபோல் தான் பாகிஸ்தானும் காஷ்மீர் விவகாரத்தை விடுத்து ஏனைய விடயங்களில் மட்டுமே படுஅக்கறை காட்டிச் செயற்படுகின்றது. ஆனால் இரு நாடுகளும் மிகவும் நெருங்க முடியாத நிலையில் தான் காஷ்மீர் விவகாரத்தை வைத்திருக்கின்றன. ஆனாலும் காஷ்மீரை விட்டு ஏனைய விடயங்களில் இரு நாடுகளும் கைகோர்ப்பதாகவே காட்டிக் கொள்ளவும் அரிதாரம் பூசுகின்றன. அந்த வகையில் இந்தியா வரும் பாகிஸ்தான் சனாதிபதி, பிரதமர் மன்மோகன் சிங்குடன் பேச்சு நடத்தவுள்ளார் என்றே கணிக்கப் படுகின்றது. அதேநேரம், முசாரப் பிரதமர் மன்மோகன்சிங்குடன் காஷ்மீர் விவகாரத்தைக் கையாள்வாரா...? என்பது சந்தேகமே.

ஏனெனில் காஷ்மீர் விவகாரம் இருநாடுகளாலும் தீர்க்க முடியாத ஒரு விவகாரமான விடயம். அதனால் அவசரப்பட்டு முஷாரப் அந்த விடயத்தை வந்ததும் வராததுமாக பிரதமர் மன்மோகன் சிங்குடன் விவாதிப்பாரா...? என்பது மிகவும் கடினமான வினா. முசாரப் ஓடும் புளியம்பழமும் போல மேலோட்டமாகக் கதைத்துவிட்டு இருநாடுகளும் பேச்சுவார்த்தை மேசையில் மீண்டும் விவாதிப்பதாகக் கூறி நழுவிவிடவும் கூடும்.

இதேவேளை இந்தியாவின் நிலைப்பாடும் இதுதான்! காஷ்மீரை பாகிஸ்தானுக்கு தாரைவார்த்துக் கொடுப்பதற்கு எளிதில் உடன்பட மாட்டாது. இத் தகைய செயல் தமக்கு கௌரவக் குறைவு என்பது அந் நாட்டின் ஆண்டாண்டு காலமான முடிவாக இருந்தே வருகின்றது எனலாம்.

எனவே இரு நாடுகளும் மிக இலகுவாக சமாதானத்தை தம்வசம் தக்கவைத்துக்கொள்வதென்பது மிகவும் இலகுவான ஒன்றல்ல.

அதுமட்டுமன்றி இருநாடுகளும் ஏற்கனவே அணுவாயுதத்தைக் கொண்டிருக்கின்றன. அத்துடன் பல ஏவுகணைப் பரிசோதனைகளையும் வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளன.

இந்த நிலையில் காஷ்மீர் விடயத்தை இருநாடுகளும் விட்டுக் கொடுப்பதற்கோ, மற்றவரிடம் மனப்பூர்வமாகக் கையளிக்க எத்தணிக்கும் என்று நாம் நம்புவதோ மடமையாகும்.

ஆனால் இருநாடுகளும் மீண்டும் பேச்சுவார்த்தை மேசையை அலங்கரிப்பதற்குத் தயாராகும். ஒவ்வொரு கட்டமாகப் பேச்சுக்களை நகர்த்தும். மீண்டும் பழைய தொய்வையே அடையும் என்பதே எதிர்கால உண்மைகளாகும்.

ஏனெனில் கடந்த ஆண்டில் கூட இருநாடுகளும் போக்குவரத்துப் பயணத்தைத் தொடங்கியிருக்கின்றன. புகையிரதம், வான்வெளி என்று கூடத் தொடங்கியிருக்கின்றன. ஒரு தடவை, இருதடவையுடன் சரி மீண்டும் அவை தடைப்பட்டுப் போய் விடுவதும் வழமை.

தற்போது கூட தொடக்கப்பட்ட பயணம் இடைநடுவில் தடைப்படும் சாத்தியமே அதிகமாக வெளித்தெரிகின்றது. ஏனெனில் தீவிரவாதிகளின் தாக்குதல்கள் பேருந்துப் பயணத்தால் வெடித்திருக்கின்றது.

எனவே மீண்டும் ஸ்ரீநகர் முசாபராபாத் பேருந்துப் பயணம் தொடரும் என்று எதிர்பார்க்க முடியாது. அப்படியே தொடர்ந்தாலும் அது நிறைய அபாயங்களைச் சுமக்க வேண்டியே இருக்கும்.

அதனால் பேருந்துப்பயணம் இன்றோ... நாளையோ.. கூடத் தடைப்படலாம். பாதைகள் மீண்டும் பழைய படி அடைக்கப்படலாம். ஜம்முகாஷ்மீர், அசாத்காஷ்மீர் மீண்டும் இரு துருவங்களாகக் காட்சியளிப்பது வெகுதூரத்தில் இல்லை.

கடந்த ஆண்டு ஜூலையில் கூட இரு நாடுகளும் பலவித சுற்றுப் பேச்சுக்களை நடத்தியிருக்கின்றன. இரு நாட்டு வெளியுறவு இணைச் செயலர்களும் கூட கைகுலுக்கியிருக்கின்றார்கள். பல ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டிருக்கின்றார்கள், பல ஆலோசனைகளை முன்வைத்திருக்கின்றார்கள்.

ஆனால் அவற்றில் எவை நடைமுறைக்கு வந்துள்ளன என்றால் எவையுமே இல்லை. எல்லாமே வெறும் காகிதத்தாளில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையே அன்றி வேறில்லை.

அதுமட்டுமன்றி இதுவரை காஷ்மீர் விவகாரத்தில் பாகிஸ்தான் தனது பிடிவாதத்திலிருந்து ஒரு இஞ்சி நழுவினாலும் கூட பாகிஸ்தானிய ஜிகாத் அமைப்பினர் தமது எதிர்ப்பைத் தெரிவித்து வந்த நிலை மாறிவிட்டதாக இல்லை. தற்போது பேருந்து சேவை தொடக்கப்பட்ட உடனேயே அவர்கள் தமது எதிர்ப்பை வெளிக்காட்டி விட்டனர். எனவே பாகிஸ்தானைப் பொறுத்தவரை ஜிகாத் அமைப்பினரை பகைத்துக்கொள்வது இலகுவானதாக அமையமாட்டாது.

ஏனெனில் ஜிகாத் அமைப்பினர் ஏற்கனவே முசாரப் மீதும், இராணுவக் கொமாண்டர் மீதும் கடந்த ஆண்டு ஜூலை தாக்குதல்களை நடத்தி யிருக்கின்றது. எனவே பாகிஸ்தானிய சமூகத்தில் ஜிகாத் அமைப்பு எவ்வளவு தூரம் ஆதிக்கத்தைப் படரவைத்துள்ளதென்பது உள்ளங்கை நெல்லிக்கனியே ஆகும்

இத்தகைய சிக்கலுக்குள் சிக்கியிருக்கும் பாகிஸ்தான் சனாதிபதி காஷ்மீர் விவகாரத்தை மிகவும் அவதானமாகவே கையாள எத்தணிப்பார். இல்லையேல் ஜிகாத் அமைப்பினரின் விரோதத்தைச் சம்பாதித்துக்கொள்ளவே நேரிடும். ஏற்கனவே அசாத் காஷ்மீர் விவகாரம் தொடர்பாகவே அவர் தாக்கப்பட்டு உயிர் தப்பியிருக்கின்றார் என்பது பழைய சம்பவம்.

எனவே தான் இந்தியா பாகிஸ்தான் சமாதானம் என்பது வெறும் பகல் கனவு என்று வர்ணிக்கத் தோன்றுகின்றது. தனித்து பேருந்து சேவை மட்டும் காஷ்மீர் மக்களின் இன்னல்களை போக்கிவிடப் போவதில்லை என்பதே மற்றுமோர் உண்மையாகும்.


இதேவேளை காஷ்மீர் மக்களுக்காக எதனையும் விட்டுக் கொடுக்கும் முயற்சியில் இந்தியா பாடுபடும் என்று அன்றைய வாஜ்பாய் தொடக்கம் இன்றைய பிரதமர் மன்மோகன் சிங், சோனியா காந்தி வரை சபதமிடுகின்றனர்.

ஆனால் இதுவரையும் இரு நாடுகளும் காஷ்மீர் மக்களுக்காக மட்டும் எதனை விட்டுக்கொடுத்துள்ளன? என்று வினா எழுப்பிப் பட்டியல்படுத்த முனைந்தால் எல்லாமே

**அ.கலைவாணி**

பூச்சியம் தான்!.

ஆக... மொத்தத்தில் காஷ்மீர் மக்கள் தமக்காக இரு நாடுகளும் சமாதானத்தை எட்ட இருப்பதாக நம்புவதெல்லாம் இலவுகாத்த கிளி போலவே இருக்குமேயன்றி கைமேல் பலனெதையும் அவர்கள் காணப்போவதில்லை என்பதே அப்பட்டமான உண்மையாகும்.




அதுமட்டுமன்றி கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக தீர்க்கப்படாத இருநாட்டு சிக்கல்களும் ஒரு பேருந்து சேவையினாலோ முஷாரப்பின் இந்திய வருகையினாலோ தீர்விற்கு வந்துவிடும் என்பது வெறும் மாயையே அன்றி வேறில்லை எனலாம்.

---

## எல்ப்–மிதிவண்டி விபத்து மன்னாரில் இருவர் படுகாயம்

மன்னார் வைத்தியசாலை வீதியில் நேற்று இடம் பெற்ற விபத்தொன்றில் இருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

30-3362 இலக்கம் கொண்ட எல்.பரக வான் ஒன்று மிதிவண்டியில் மோதியதில் மிதிவண்டியில் வந்து கொண்டிருந்த அ.ஞானப்பிரகாசம் (வயது-60), அவரது மகன் ஞா.மதுராசா ஆகியோர் பலத்த காயத்திற்குட்பட்டு மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை மன்னார் பொலிசார் மேற்கொண்டுள்ளனர். (18)

## ஒக்ஸ்பாம் நிதியுதவியுடன் 25 பயனாளிகளுக்கு கடன் வழங்கல்

(கிளிநொச்சி)

ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் நிதியுதவியுடன் கிளி.கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தால் வட்டக்கச்சி ஆலடிக் கிராமத்தில் 25 பயனாளிகளிற்கு இரண்டு இலட்சத்து எழுபத்தைந்தாயிரம் ரூபா சுயதொழில் விவசாயக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. பத்துப்பயனாளிகளிற்கு விவசாயக் கடனாக தலா 5000 ரூபா வீதமும், 15 பயனாளிகளிற்கு விவசாயக்கடனாக தலா 15000 ரூபாவும் வழங்கப்பட்டுள்ளன. (15)

## பொது மண்டபங்கள் அமைப்பு

யாழ்.தீவகத்திலுள்ள ஊர்காவற்துறைப் பிரசேத்தில் நிகொட் திட்டத்தின் கீழ் இரு வேறு பொது மண்டபங்கள் அமைக்கப்படவுள்ளன.

இப்பகுதி மக்களின் சமூக மேம்பாட்டை கவனத்தில் கொண்டு அமைக்கப்படும் இப் பொதுமண்டபங்கள் ஒவ்வொன்றும் ஏழு லட்சம் ரூபா செலவில் நிறுவப்படவுள்ளன.

இவை புளியங்கூடல் மற்றும் கரம்பொன் ஆகிய பிரதேசங்களில் நிறுவப்படவுள்ளன. இதற்கான நிர்மாணப் பணிகள் விரைவில் ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (33)

## கணினிப் பயிற்சி நெறி ஆரம்ப வைபவம்

(உடையார்கட்டு)

உடையார்கட்டு மகாவித்தியாலயத்தில் முறைசாராக் கல்வித் திட்டத்தில் கணினிப் பயிற்சி நெறிக்கான ஆரம்ப வைபவம் கடந்த வெள்ளியன்று பி.ப 1.30 மணிக்கு அதிபர் ராஜா தலைமையில் ஆரம்பமானது.

இந்நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ.சிவராசா, கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஜி.எஸ். பரமேஸ்வரன், முறைசாராக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.ராஜரட்ணம் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (19)




**மேற்கிந்திய** கிரிக்கெட் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரரும், உலக பிரசித்தி பெற்ற வீரருமான பிரைன் லாறா தனது சாதனை பயணத்தில் ஒரு படி முன்னேறிச் சென்றுள்ளார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான போட்டப்ஸ் பெயினில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்டில் இடம்பெற்ற லாறா டெஸ்ட் போட்டியில் 27 ஆவதுசதத்தை பெற்று சகநாட்டுவீரர் கரி சோபர்சின் சாதனையை விஞ்சினார். இதன் மூலம் வீரர்களின் சத சாதனையில் நான்காவது இடத்துக்குமுன்னேறினார் லாறா. இவர் இதேபோட்டியில் இரட்டைச் சதம் பெறும் வாய்ப்பை நான்கு ஓட்டங்களால் தவறவிட்டார்.

இரட்டைசதத்தை பெற்றிருந்தால் அது லாறாவின் எட்டாவது இரட்டைச் சதமாக அமைந்திருக்கும் ஏற்கனவே 12 இரட்டை சதங்களை பெற்று அவுஸ்திரேலியாவின் டொன் பிரட்மன் முதலிடத்திலுள்ளார்.

ஏற்கனவே டெஸ்ட் போட்டியில் 400 ஓட்டங்களை குவித்து சாதனை படைத்துள்ள லாறாவிற்கு இரட்டை சதம் பெறுவதென்பது சாதாரண விடயமே.




ஆனாலும் அணிக்கு மீண்டும் திரும்புவதில் ஏற்பட்ட சிக்கை அணித்தலைவர் பதவியை இழந்து அணியில் ஒரு வீரராக விளையாடும் நிலை போன்றவற்றிற்றிற்கிடையில் பெற்ற இவ் ஓட்டம் பெறுமதியானதே.

35வயதாகும் லாறா 113 டெஸ்ட் போட்டிகளில் 27 சதங்களை பெற்றுள்ளார். அவுஸ்திரேலிய அணியின் அலன் போடரும் 27 சதத்தை பெற்றுள்ளார். அதிகசதங்களை இந்தியாவின் சுனில் கவாஸ்கரும், சச்சின் டெண்டுல்கரும் பெற்றுள்ளனர்(34 சதம்), 32 சதங்களுடன் ஸ்ரீவோ இரண்டாவது இடத்திலும் 29 சதங்களுடன் அவுஸ்திரேலியாவின் டொனால் பிரட்மன் மூன்றாவது இடத்திலுமுள்ளனர். இதில் தற்போது லாறாவும், சச்சினுமே விளையாடி வருகின்றனர். இவர்களில் சச்சினைப் பார்க்கிலும் லாறா தற்போது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றார். எனவே ஓய்வுக்கு முன்னர் டெஸ்ட் போட்டிகளில் லாறா புதிய சாதனைகளை ஏற்படுத்த வாய்ப்புள்ளது.




**கால்பந்து** விளையாட்டு தெரியாதவர்கள் இருக்க முடியாது. தெரியாதவர்களுக்கும் தெரிந்த பெயர் டேவிட் பெக்காம். களத்திலும் சரி அதற்கு வெளியேயும் சரி கலக்கல் ஹீரோ.

தலைமுடியை வித்தியாசமாக அலங்கரிப்பது அதிசயிக்கும் வகையில் கோல் அடிப்பதும் என்று ரசிகர்களை கட்டி இழுப்பார். இந்த பிரிட்டன் வீரர்.களத்துக்கு வெளியே இன்னும் அதிகம். பொம்மைகள் போல் விதம்விதமான ஆடைகள் அணிந்து காட்சியளிப்பார். பெண்களால் அதிகம் ரசிக்கப்படும் ஆண்கள் பட்டியலில் இவருக்கு எப்போதும் இடமுண்டு.இப்போது கொஞ்சம் கொஞ்சமாக சரிகிறது இவரது புகழ். பிரித்தானியாவிலுள்ள பத்திரிகைகள் ஆண்டு தோறும் யாருக்கு எவ்வளவு செல்வாக்கு என்று கருத்துக் கணிப்பு நடத்தி வருகின்றன.

இந்த ஆண்டும் விருது அறிவிக்கப்பட்டது. ஆனால் பெக்காமுக்கு அல்ல.


இப்போது இவரது ஆடைத் தெரிவுகள் மோசமானதாகவுள்ளது என்கின்றன. இங்கிலாந்து ஆடை அழகு நிலையங்கள். இதனை கேள்விப்பட்டு வருத்தப்படுகிறாராம் பெக்காம். சரி இந்த ஆண்டு விருது யாருக்கு போனதாம் அதுவும் கால்பந்து வீரர்தானாம். ரொனால்டோ, ரொனால் டினோ போன்ற பிரபலங்களுக்கு என்று நினைத்து விடாதீர்கள் பெக்காமுடன் இணைந்து விளையாடும் ரியோ பெர்டினண்ட் இம் முறை விருதையும் ரசிகைகள் மனதையும் கவர்ந்துள்ளார். இவரே கடந்த ஆண்டு ஐரோப்பாவின் சிறந்த கால்பந்து வீராகவும் தெரிவாகியிருந்தார்.

## நாமும் சளைத்தவர்களல்ல...



அவுஸ்திரேலிய-இந்திய அணிகளுக்கிடையில் தென்னாபிரிக்காவில் நடைபெற்ற மகளிர் உலகக் கிண்ணப் போட்டியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய மகளிர் அணி. இவ்வெற்றி மூலம் ஐந்தாவது தடவையாக வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## பெயர் சொல்லும் இரட்டையர்



சர்வதேச கிரிக்கெட்டில் சகோதரர்களான பல இரட்டையர்கள் வந்து போயுள்ளனர். சிம்பாவேயின் அன்டி பிளவர், கிறாண்ட் பிளவர் சகோதரர்களும் சிறிலங்காவின் அர்ஜுன, சஞ்சீவ சகோதரர்களும், அவுஸ்திரேலியாவின் ஸ்ரீவ்வோ, மார்க்வோ சகோதரர்களும் அவர்களில் அடங்குவர்.

அதேபோன்று தற்போதும் நியூசிலாந்து அணியிலும், ஜேம்ஸ் மார்ஷல், ஹாமிஸ் மார்ஷஸ் சகோதரர்கள் களமாடி வருகின்றனர்.

ஆக்லண்டில் 1979ஆம் ஆண்டு பிறந்த இவ்விரட்டையர்களில் முதலில் டெஸ்ட் கிரிக்கெட்டில் வாய்ப்பு பெற்றவர். ஹாமிஸ் அவார்.2000ஆம் அண்டில் தென்னாபிரிக்கா அணிக்கெதிராக ஏழாவது துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய இவர் 40 ஓட்டங்களைப் பெற்றார். பின்னர் மூன்று வருடங்கள் அணியிலிருந்தும் நீக்கப்பட்டிருந்தார். 2002 ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் நடைபெற்ற நட்வெஸ்ட் கிண்ணப் போட்டியில் இங்கிலாந்துக் கெதிராக திறம்பட ஆடியதால் அவர் நியூசிலாந்து அணிக்கு இன்றியமையாதவரானார். அப்போது அவர் தனது கன்னி அரைச் சதத்தைப் பெற்றார்.

மார்ஷல் சகோதரர்கள் இருவரும் ஒரே பயிற்சியாளரிடமே பயில்கின்றனர். அண்மையில் சிறிலங்காவுடனான முதலாவது டெஸ்டில் இருவரும் இணைப்பாட்டமாக 107 ஓட்டங்களைப் பெற்றனர்.

இவ்இனிங்சில் ஹாமிஸ் மார்ஷல் 160 ஓட்டங் களைப் பெற்றார். அத்துடன் அவுஸ்திரேலியாவுடனான போட்டியிலும் 146 ஓட்டங்களைப் பெற்றார்.

இந்த வகையில் இவ்களிருவரும் மார்க்வோ சகோதரர்கள் போன்று பிரகாசிப்பார்களா என்பது எதிர்பார்க்கப்படுகின்றது.

வடிவேல்



# அதிர்ஷ்டம் யார் பக்கம்?

**இந்திய**-பாகிஸ்தான் மோதல் என்றாலே பரபரப்புக்கு பஞ்சமில்லை.

இது இந்தியாவிலும் சரி, பாகிஸ்தானிலும் சரி, அந்நிய மண்ணிலும் சரி இரு அணிகளும் சந்திக்கப்போகின்ற போட்டி அட்டவணை வெளியாகிய நாளில் இருந்தே பத்திரிகைகள், வானொலிகள், தொலைக்காட்சிகள் என அனைத்துமே போட்டி தொடர்பான கருத்துக்களை, விமர்சனங்களை ஒலி, ஒளிபரப்பத் தவறுவதில்லை.

இத்தனைக்கும் அரசியல் ரீதியில் இரு அணிகளுக்குமிடையிலான போட்டிகள் முக்கியத்துவம் பெற்று விட்டன.

இந்த நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான ஆறு போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் இந்திய-பாகிஸ்தான் ரசிகர்களுக்கிடையில் பலத்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

தற்போது மூன்று போட்டிகள் நிறைவடைந்த நிலையில் இந்தியஅணி இரண்டு போட்டிகளில் வெற்றி பெற்று முன்னிலையிலுள்ளது. ஆனாலும் பாகிஸ்தான் மூன்றாவது போட்டியை வென்றுள்ளமை தொடரைக் கைப்பற்றப்போவது பாகிஸ்தானா? இந்தியாவா? என்ற கருத்தை பல்வேறு மட்டங்களிலும் ஏற்படுத்தியுள்ளது.

பொதுவாக இரு அணித் தலைவர்களுக்கும் போட்டித் தொடர் சவால் நிறைந்ததாக அமைந்து விட்டது. இவர்கள் வெளிப்படையாக இன்னது தான் நடக்கும் என்று கருத்து தெரிவிக்கின்ற போதும் நாணயச் சுழற்சி, காலநிலை என்பன போட்டியில் செல்வாக்கு செலுத்துவதால் தொடரை கைப்பற்ற எந்த அணிக்கு சாதகம் என்று யாரும் அறுதியிட்டு கூறிவிடமுடியாது.

ஏனெனில் நடைபெற்று முடிந்த மூன்று போட்டியிலும் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அணியே வெற்றி பெற்றதை சுட்டிக் காட்டலாம்.

முதல் இரு போட்டிகளை இந்திய அணி வெற்றிபெற்ற போதும் பாகிஸ்தான் போராடித் தோற்றதையும் மறந்து விட முடியாது. இந்தியாவைப் பொறுத்து சிறந்த துடுப்பாட்ட வரிசையைக் கொண்டிருந்தும், மூன்றாவது போட்டியில் விரைவாக விக்கெட்டுக்களை இழந்தமை அவ்வணி இனிவரும் போட்டிகளை எவ்வாறு அணுகும் என்ற கேள்வியும் எழாமலில்லை.

இதற்கிடையில் பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாமோ இந்திய அணிக்கே தொடரைக் கைப்பற்றும் வாய்ப்பு என மனந்திறந்து சொல்கிறார்.

ஆனாலும் வெற்றி வேட்கையுடன் களத்தில் போராடுவதை பார்க்கும் போது இவரா இப்படிச் சொன்னார் என எண்ணத் தோன்றுகிறது. இது அணித் தலைவருக்குரிய பண்பாடா? அது அவருக்கே வெளிச்சம்.

இந்திய அணித்தலைவர் கங்குலியோ தொடர் சவாலானது இருந்தும் நாங்கள் தொடரைக்கைப்பற்றுவோம் எனச் சொல்கிறார். அவர் தனது வீரர்களை வெற்றிக்காக நம்புகின்றார். மொத்தத்தில் வெற்றிக்காக இரு அணிகளும் இறுதிவரை போராடும் என்பதை துணிந்து கூறலாம்.

# ஐ.தே.கவின் 12 முன்னாள் அமைச்சர்களை அரசில் இணைக்க இரகசியப் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கத்தின் ஆட்சியின் போது லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளாகி வழக்குத் தொடரப்பட்ட பன்னிரண்டு முன்னாள் அமைச்சர்களை சனாதிபதி சந்திரிகாவின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் இணைப்பதற்கு இரகசியப் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சந்திரிகா, ஐ.தே.முன்னணி அரசின் ஊடகத்துறை அமைச்சை பொறுப்பேற்றதுடன் ஊழல் மோசடி விவகாரம் தலை தூக்கியது. அந்த விவகாரம் நீதிமன்றம் வரை சென்றிருப்பினும் தற்போது இதனை திரும்பப் பெறுவதாகவும் தமது அரசில் இணையுமாறும் சம்பந்தப்பட்ட முன்னாள் அமைச்சர்களை சந்திரிகாவின் நெருங்கிய அரசியல் வாதி ஒருவர் கேட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

# விசேட வைத்தியர்களுக்கு 1900 வெற்றிடங்கள் உள்ளன

(கொழும்பு)

நாட்டில் விசேட வைத்தியர்களுக்கு சுமார் 1900 வெற்றிடங்கள் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் தற்சமயம் விசேட துறை வைத்தியர்கள் சுமார் 800 பேரே சேவையிலுள்ளனர்.

இதன் காரணமாக நாட்டில் பாரிய சுகாதாரப் பிரச்சினைக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. விசேட வைத்திய பயிற்சிக்காக வெளிநாடு சென்றுள்ள வைத்தியர்கள் இன்னும் சில மாதங்களில் நாடு திரும்பியதும் இப்பிரச்சினை தீரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(32)

# அடுத்த சனாதிபதி ரணில்; ரவிகருணாநாயக்க நம்பிக்கை

(கொழும்பு)

இந்த வருடம் நவம்பர் மாதத்தின் பின்னர் நடைபெறும் சனாதிபதித் தேர்தல் மூலமாக ரணில் விக்கிரமசிங்க நிச்சயமாகச் சனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார். இதன் மூலம் வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை மீளவும் கட்டியெழுப்புவார். எனப் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க நம்பிக்கை தெரிவித்தார். கோட்டே ஐக்கிய தேசியக் கட்சியின் 48 கிளைகள் கடந்த சனிக்கிழமை மீள அமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கோட்டே பிரதேசத்தின் பிரதான அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவி கருணாநாயக்க இந்த நிகழ்வினை ஒழுங்கு செய்திருந்தார். இந்த நிகழ்வு குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

# போலி வாகனஓட்டுநர் அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கும் நிலையம் கண்டுபிடிப்பு

நாரஹேன்பிட்டியவில் அமைந்துள்ள வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கும் நிலையத்தின் அருகிலுள்ள வீட்டில் இருந்து பெருமளவு சட்டவிரோத வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

அண்மையில் இந்தச் சட்டவிரோத அனுமதிப்பத்திரங்கள் கோட்டை பொலிசாரால் கைப்பற்றப்பட்டன.

இந்த வீட்டில் எந்த ஒரு வைத்திய சான்றிதழும் இன்றி உடனடியாக வாகன ஓட்டுநர் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டு வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. பொலிசார் குறிப்பிட்ட வீட்டில் உள்ளவர்களைக் கைது செய்த வேளையில் அவர்களிடம் இருந்து பெருமளவு வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவை பெரும்பாலும் காலி, மாத்தறை, நுவரேலிய, தலவாக்கலை போன்ற பல இடங்களிலும் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. இதனையடுத்து இவ்வாறான வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரங்களை வைத்திருக்கும் வாகன ஓட்டுநர்களை கைது செய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

# பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு இரண்டு அரச வங்கிகள் நிதியுதவி

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை தனியார் மயப்படுத்தாமல் இலாபமீட்டும் நிறுவனமாக முன்னெடுத்துச் செல்வதற்கான நிதியுதவியை வழங்க இரண்டு அரச வங்கிகள் முன்வந்துள்ளன. இந்தத் தகவல்களை கூட்டுத்தாபனத்தின உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

திறைசேரியில் வைப்பிலிடப்பட்டுள்ள கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 30 சதவீதமான பங்குகளை இந்திய நிறுவனமான பாரத் பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு வழங்கும் திட்டத்தை கைவிட்டு அதற்கு சமனான பங்குகளை இந்த வங்கிகளில் வைப்புச் செய்யப்பட வேண்டுமெனவும் இந்த வங்கிகள் தெரிவித்துள்ளன. அதேவேளை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 30 கோடி அமெரிக்க டொலர்களை அரச வங்கிகளுக்கு செலுத்த வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (32)

# பாரிய பணவீக்கத்தை நாடு சந்தித்துள்ளது

### -ஐ.தே.கட்சி கண்டனம்

(கொழும்பு)

நாடு இன்று பாரிய பணவீக்கத்துக்குள் இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் குணவர்த்தன இதனைத் தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்க ஆட்சிக் காலத்தில் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி வளர்ச்சி வீதம் 6.3 ஆக இருந்தது. ஆனால் இன்று அது 5.4 ஆக குன்றியுள்ளது. 15 வீதத்தால் பண்டங்களின் விலைகள் அதிகரித்துள்ளன. எனவே மக்கள் இந்த முறை புதுவருடத்தை பாரிய துன்பத்திற்கு மத்தியிலேயே கொண்டாடுவதாக அவர் குறிப்பிட்டார்.(32)

# சனாதிபதியின் பதவிக்காலத்தை கூட்டுவதற்கான வழிகள் உள்ளன

### -அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க கூறுகிறார்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு ஐந்துவருடகால பதவிக்காலம் உள்ளது. சனாதிபதிக்கு எத்தனை வருடம் உள்ளது என்பது எனக்குத்தெரியாது. அதனைக் கூட்டுவதற்கான வழிகள் உள்ளன. நாம் அது குறித்து இன்னமும் பேசவில்லையென அமைச்சர் அநுராபண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

பிரதமர் முதல் அடிமட்டம்வரை இந்த நாட்டில் உள்ள அனைவரும் ஐக்கியமக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டமையினாலேயே வாழ்கின்றனர்.

நானும் ஜே.வி.பியினரும் அமைச்சர் மங்களசமரவீர, தினேஷ் குணவர்த்தனவும் ஏச்சுப்பேச்சுக்கள் வாங்கிக்கொண்டு இந்தக் கூட்டணியை அமைத்தோம்

கூட்டணி அரசாங்கத்தைப் பாதுகாப்பது கூட்டணிக்கட்சிகளின் பொறுப்பு. அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சிலர் இதனைப்புரிந்து கொள்ளவில்லை.

ஜே.வி.பியினர் மீது குற்றம் சாட்டுவோர் இந்தக் கூட்டமைப்பு அமைக்கப்பட்டமையினால் தான் பிரதி அமைச்சுப் பதவிகளில் தாம் இருக்கிறோம் என்பதை மறந்து போகின்றரெனவும் அவர்மேலும் தெரிவித்தார்.

## யூலையில் மறு சீரமைப்பு

(கொழும்பு)

அரச ஊடக நிறுவனங்களை மறுசீரமைப்பதற்கான திட்டம் இந்த ஆண்டு யூலை மாதம் ஆரம்பித்து வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறிலங்கா ஊடக அமைச்சர் மங்கள சமரவீர இது தொடர்பாக நியமிக்கப்பட்ட குழு அதன் விதப்புரைகளை விரைவில் சமர்ப்பிக்க வேண்டும் என்று பணித்துள்ளார்.

இந்தக் குழுவின் அங்கத்தவர்கள் அடுத்த வாரத்திலிருந்து அரசாங்க ஊடக நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் பணிப்பாளர்களைச் சந்தித்து அவர்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வார்கள் எனவும் அந்தக் குழு மே மாதம் தொடக்கம் கூட்டங்களை நடத்தி அறிக்கை தயாரிக்குமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 1972 . 04 . 28



மறைவு 2003 . 04 . 12

**பவுலீனப்பு ஜோட்வின்சன்**

(சுரேஸ்)

*எம் பாசத்தின் குலவிளக்கே*
*நீர் எம்மை விட்டு இரண்டு ஆண்டுகள்*
*சென்றாலும் ஆறவில்லை இன்னும்*
*உம்துயரம்*
*நீ வருவாய் என வழிமேல்*
*விழிவைத்து காத்திருந்தோம்*
*வந்ததடா செய்தி நீ எம்மை விட்டு*
*பிரிந்துவிட்டாய் என்று*
*உன்னை பத்து மாதம் சுமந்து பாசத்துடன்*
*பெற்றெடுத்துச் சீராட்டி தாலாட்டி*
*செல்லமாக வளர்த்த அன்னையை*
*பாதியிலே பரிதவிக்க விட்டுச் சென்றாயோ*
*உனக்கு அறிவுரை கூறிய தந்தையையும்*
*உன் உடன் பிறப்புக்களையும் பரிதவிக்க*
*விட்டு எங்கு சென்றாய் மகனே.*

இவரது ஆத்மா சாந்தியடைய செம்பியன்பற்று புனித பிலிப் நேரியார் ஆலயத்தில் 12.04.2005 இன்று காலை 7 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுமென உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(5971)

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 08 . 01 . 1922



உதிர்வு 13 . 04 . 1995

அமரர்

**இசிதோர் -பிலிப்பையா**

(செல்வராசா)

(சிலாவத்தை முல்லைத்தீவு)

**எங்கள் குடும்பத்து குலவிளக்கே**
**பாசத்தின் தெய்வமே எங்கள் ஐயாவே**
**ஆலமரம் போல் நின்று நிழல்கொடுத்த தெய்வமே**
**எம்மை எல்லாம் தவிக்கவிட்டுச் சென்றதேனோ**
**கண் அயர்ந்து போனாலும் கலையவில்லை உன் உருவம்**
**எம்மை விட்டு நீங்கள் சென்று ஆண்டுகள் பத்து**
**ஆனது உண்மை உங்கள் நினைவுகள் இன்றுபோல்**
**என்றும் தொடர்கின்றது உங்கள் பிரிவு தந்த வேதனை**
**நித்தமும் எம்மை வாட்டுகிறது உங்களுக்காய் அழுகின்றோம்**
**மீண்டும் இங்கு வர மாட்டிரோ.**

எங்கள் ஐயாவின் 10 ஆவது ஆண்டு நினைவாக 13.04.2005 நாளை காலை 6.30 மணிக்கு சிலாவத்தை அன்னம்மா ஆலயத்தில் இவரது ஆத்ம சாந்திக்காக திருப்பலிப் பூசை ஒப்புக்கொடுக்கப்பட இருக்கின்றது. இத்திருப்பலியில் அனைவரையும் பங்குபற்றி இவ ருக்காக செபிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தகவல்: -பி. மனோ (மகன்)*
*மடு அன்னை ப/பொ,*
*முல்லைத்தீவு.*

*பிரிவால் வாடும்*
*மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.*

(5822)

# கேரளாவில் காங்கிரஸ் கட்சி உடைவையடுத்து

# புதிய கட்சி தொடங்க கருணாகரன் யோசனை!

(திருவனந்தபுரம்)

**கேரளாவில் காங்கிரஸ் கட்சி சிதைவடைந்ததையடுத்து புதிய கட்சி தொடங்க கருணாகரன் ஆலோசனை நடத்தி வருகிறார். கேரளாவின் மூத்த காங்கிரஸ் தலைவர் கருணாகரனின் மகன் முரளீதரன் ஆறு ஆண்டுகள் காங்கிரஸ் கட்சியில் இருந்து நீக்கப்பட்டமைஅவருக்குஆத்திரமூட்டியுள்ளது. இது குறித்து திருவனந்தபுரத்தில் நிருபர்கள் கருணாகரனிடம் கேட்டதற்கு,**

75 ஆண்டு காலம் காங்கிரஸ் கட்சிக்காக உழைத்திருக்கிறேன். எத்தனையோ முறை காங்கிரஸ் மேலிடத்துக்குப் பல்வேறு பிரச்சினைகளைக் கொண்டு சென்று தீர்வு கண்டிருக்கிறேன்.

ஆனால் நான் சந்தர்ப்பவாதியாக இருந்தது இல்லை. இப்போது சந்தர்ப்பவாதிகள் வெற்றி பெற்று விட்டனர்.

எனது நீண்ட கால அரசியலுக்கு பரிசு கொடுத்திருக்கிறார்கள். காங்கிரஸ் மேலிடம் நன்றி மறந்துவிட்டது. என் மகனை ஆறு ஆண்டுகள் நீக்கியது நன்றிகெட்ட செயல். முரளீதரனை நீக்கியதற்கு, முக்கிய காரணம் முதல்-மந்திரி உம்மன் சாண்டி, கேரள பிரதேச காங்கிரஸ் தலைவர் தென்னலை பால கிருஷ்ணபிள்ளை ஆகியோர் தான்.

எனது உடலில் கடைசி மூச்சு இருக்கும் வரை இது போன்ற நடவடிக்கைகளுக்கு தலைவணங்க மாட்டேன். தொண்டர்களின் முடிவுப்படி நடந்துகொள்வேன். மேலிடத்து நடவடிக்கையை ஏற்க மாட்டோம் இவ்வாறு கருணாகரன் கூறினார்.

புதிய கட்சி தொடங்குவது பற்றி கருணாகரன் எதுவும் கூறவில்லை என்றாலும் கட்சி உடைவது உறுதி என்று அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள். மேலும் இன்று திருவனந்தபுரத்தில் நடைபெறும் கூட்டத்தில் கருணாகரன் ஆதரவாளர்களும், ஆதரவு சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்கிறார்கள். இந்தக் கூட்டத்தில் புதிய கட்சி பற்றிய அறிவிப்பு வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய கட்சி "இந்திரா காந்தி" பெயரில் அமையும் என்று கருதப்படுகிறது. தற்போது கேரளாவில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய சனநாயகக் கூட்டணி ஆட்சி நடந்து வருகிறது. 140 உறுப்பினர்களை கொண்ட சட்டசபையில் காங்கிரஸ் கூட்டணிக்கு 98 சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவுள்ளது. இதில் கருணாகரன் சார்பான 14 பேரின் ஆதரவு வாபஸ் பெறப்பட்டாலும் ஆட்சிக்கு ஆபத்தில்லை.

என்றாலும் நடக்க இருக்கும் ஊராட்சித்தேர்தலில் தனது பலத்தை நிரூபிக்க இப்போதே வியூகம் வகுக்கத் தொடங்கி விட்டார் கருணாகரன். ஐக்கிய சனநாயகக் கூட்டணியில் இடம்பெற்றுள்ள மூன்று கட்சித் தலைவர்களைச் சந்தித்து கருணாகரன் ஆலோசனை நடத்தினார். புரட்சி சோசலிஸ் கட்சி மற்றும் கேரள காங்கிரஸ் கட்சிகளுடன் கூட்டணி அமைத்து ஊராட்சித் தேர்தலில் சந்திக்க கருணாகரன் திட்டமிட்டு இருக்கிறார். அத்துடன் இந்திய கம்யூனிஸ்ட் கூட்டணியுடன் தொகுதி உடன்பாடு கொள்ளவும் அவர் பேச்சு நடத்தி வருகிறார்.

கருணாகரனின் இந்த "வியூகம்" ஊராட்சி தேர்தலில் வெற்றி பெற்றால் இதே முறையில் சட்டசபை தேர்தலையும் சந்திக்கவும் அவர் திட்டமிட்டு இருக்கிறார். இதேவேளை முரளீதரன் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து கேரளாவில் முக்கிய நகர்களில் அவரது ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளார்கள்.

# பா.ஜ.க. கூட்டணியில் இருந்து தெலுங்கு தேசம் விலக முடிவு

(ஹைதரபாத்)

பாரதீய ஜனதா கூட்டணியில் இருந்து தெலுங்கு தேசக் கட்சி விலக முடிவு செய்துள்ளது.

பாரதீய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியி ஆட்சியில் தெலுங்கு தேசக் கட்சி இடம்பெற்று இருந்தது. பாராளுமன்ற தேர்தல் தோல்வியை தழுவிய பாரதீய ஜனதாக் கூட்டணி ஆட்சியை இழந்தது, தெலுங்கு தேசக் கட்சியும், மாநில தேர்தலில் தோல்வி அடைந்து அதன் மதிப்பை இழந்திருக்கின்றது. இந்தத் தேர்தல் தோல்விகளுக்கு பா.ஜ.க.வின் மதவாதக் கொள்கையே காரணம் என்று தெலுங்கு தேசம் கட்சி கருகிறது.

இந்த நிலையில் ஆந்திர மாநிலத்தில் நடக்கவிருக்கும் நகரசபைத் தேர்தலில் தெலுங்கு தேசக் கட்சியுடன் கூட்டணி வைக்க மாட்டோம் தனித்து போட்டியிடுவோம்" என்று பாரதீய ஜனதா அறிவித்திருக்கிறது.

எங்களுக்கு என்று தனி கொள்கை உண்டு செயற்றிட்டங்கள் உண்டு நகரசபை தேர்தலில் யாருடைய துணையும் இன்றி போட்டியிட்டு வெற்றி பெறுவோம் என்று ஆந்திராவின் பாரதீய ஜனதா கட்சித் தலைவர் பி.தத்தாத்ரேயா கூறினார்.

சமீபத்தில் காஞ்சி சங்கராச்சாரியாருக்கு ஆதரவாக பாரதீய ஜனதா நடத்திய போராட்டத்தில் கலந்து கொள்ள தெலுங்கு தேசத்துக்கு அழைப்பு விடுக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

சமீபத்தில் டில்லியில் நடந்த பாரதீய ஜனதாக் கட்சியின் வெள்ளி விழா, செயற்குழு கூட்டத்தில் தலைவர் அத்வானி பேசியபோது இந்துத்துவ கொள்கையில் மாற்றம் இல்லை. அயோத்தியில் இராமர் கோவில் கட்டும் கொள்கையிலும் மாற்றம் இல்லை. ஆர்.எஸ்.எஸ் அமைப்புடன் தொடர்பு நீடிக்கும் என்று குறிப்பிட்டார். இந்தப் பேச்சு தெலுங்கு தேசக் கட்சித் தலைவர்களிடம் அதிருப்தியை ஏற்படுத்தியது. இது பற்றி தெலுங்கு தேசக் கட்சிப் பாராளுமன்ற கட்சித் தலைவர் கூறும்போது பாரதீய ஜனதாவின் இந்துத்துவ அணுகுமுறை அயோத்தி பிரச்சினையில் பாரதீய ஜனதாவின் அறிவிப்பு ஆகியவை அக் கட்சியின் மதவாதக் கொள்கையை உறுதிப் படுத்துகிறது.

மதவாதம், இந்துத்துவக் கொள்கையில் இருந்து மாறாத பாரதீய ஜனதாவுடன் தொடர்ந்து கூட்டணி வைத்துக்கொள்வது எப்படி? நாங்கள் மதவாதத்தை ஆதரிக்கவில்லை. மதசார்பு இன்மை தான் எங்கள் கொள்கை இவ்வாறு தெலுங்கு தேசம் கட்சி பாராளுமன்றக் குழுத் தலைவர் அன்ரன் நாயுடு கூறினார்.

# அறுவைச்சிகிச்சையின்போது உடலுக்குள் குச்சியை வைத்த வைத்தியர் மீது வழக்கு!

ஆந்திராவில் உள்ள வைத்தியசாலையொன்றில் நடைபெற்ற சத்திர சிகிச்சையின் போது சிகிச்சையளிக்கப்பட்ட பெண்ணின் வயிற்றில் மருந்து பூசும் குச்சி ஒன்றை வைத்து விட்ட வைத்தியர் மீது பொலிசார் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

ஹைதராபாத்தைச் சேர்ந்த பிரதீபாஎனும் வைத்தியர் கடந்த சில தினங்களுக்கு முன்பு தன்னிடம் வந்த கர்ப்பிணிப் பெண் ஒருவருக்கு அறுவைச் சிகிச்சை செய்து குழந்தையை வெளியில் எடுத்தார். மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பிய அப் பெண்ணின் உடல் நிலை மோசமடையைத் தொடங்கி வயிற்றில் வலி அதிகமாகிக் கொண்டே இருந்தது. உறவினர்கள் அப் பெண்ணை வேறொரு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று வைத்தியரிடம் காண்பித்தனர். அந்த வைத்தியர் நடத்திய பரிசோதனையில் பெண்ணின் வயிற்றில் வெள்ளையாக ஒரு பொருள் இருப்பது தெரிந்தது. மீண்டும் அப் பெண்ணிற்கு அறுவைச் சிகிச்சை நடந்தது. மருந்து பூசப்படும் பஞ்சினால் ஆன குச்சி ஒன்று பெண்ணின் வயிற்றில் இருந்து கண்டறியப்பட்டது. வைத்தியர்கள் அதை அகற்றினர் குச்சி ஒன்பது அங்குலம் அளவு இருந்தது,இதனையடுத்து முதலில் அறுவைச் சிகிச்சை செய்த போது கவனக் குறைவாக செயற்பட்ட வைத்தியர் பிரதீபா மீது அவரது தலைமையிலான மருத்துவக் குழுவினர் மீதும் ஐதரபாத் பொலிசார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

# ஐக்கிய முற்போக்குக் கூட்டணியை பஸ்வான் பலவீனப்படுத்துகிறார்

### *இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்*

ஐக்கிய முற்போக்குக் கூட்டணியை ராம்விலாஸ் பஸ்வான் பலவீனப்படுத்துகிறார். பீகாரின் முட்டுக்கட்டை நிலைமைக்குப் புதிதாக தேர்தல் நடத்துவதே சிறந்த தீர்வு என இந்திய கம்யூனிஸ் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.பத்திரிகை ஒன்றுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பொதுச்செயலர் டி.ராஜா தெரிவிக்கும்போது பீகாரில் ஏற்பட்டுள்ள அரசியல் முட்டுக்கட்டை நிலைமையை தீர்க்க மறு தேர்தல் நடத்துவது ஒன்றே சிறந்த தீர்வு. மீண்டும் மக்களிடம் செல்வோம். மத்திய அமைச்சரும் லோக் ஜனசக்தித் தலைவருமான ராம்விலாஸ் பஸ்வான் ஐ.மு. கூட்டணியை பலவீனப்படுத்துகிறார். காப்புரிமைப் பிரரேரணையைப் பொறுத்த அளவில் காங்கிரஸ் மற்றும் பா.ஜ கட்சிகள் மோசமான நிலையை எடுத்து வருகின்றன. காப்புரிமை பிரேரணை நிறைவேற்றப்பட்டாலும், அதை அமுல்படுத்தும் முறையை கண்காணிப்போம் இவ்வாறு ராஜா கூறினார்.

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## நிவாரணம் ,புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சினால் யாழ்.மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் அத்தியாவசிய உணவு வகைகள் வழங்கலுக்கான

## கோதுமை மா கேள்விகோரல்

*ஏப்ரல்,மே, யூன் - 2005*

01) யாழ்.மாவட்டத்தில் இலவச நிவாரணத்திற்கு மாதமொன்றிற்கு 400Mt படி 1200 Mt கோதுமை மா விநியோகிப்பதற்காக கேள்விகள் யாழ்ப்பாணம் முகவர்களிடமிருந்து கோரப்படுகின்றது.

| விநியோகிக்க வேண்டிய தொகை | அளவு |
|---|---|
| 2005 ஏப்ரல் | 400 Mt |
| 2005 மே | 400 Mt |
| 2005 யூன் | 400 Mt |

கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்பும் முகவர்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500.00 இனை யாழ்.மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி கேள்விப்படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் 2005.04.11 ஆம் திகதி தொடக்கம் 2005.04.26 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் மு.ப 10.00 மணி தொடக்கம் பி.ப 3.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

02) கேள்வியைச் சமர்ப்பிப்பதற்கு பந்தி 01 இல் குறிப்பிட்டுள்ள ஆர்வமுள்ளவர்கள் மீளளிக்கக்கூடிய கேள்விவைப்பாக(விலைகேள்முறி -Bid Bond) மெற்றிக் தொன் ஒன்றிற்கு (01Mt) ரூபா நானூறுப்படி (ரூபா 400.00) செலுத்துதல் வேண்டும்.(விபரம்கேள்விஆவணத்திலுள்ளது.)

03) பூரணப்படுத்திய இருகேள்விப்படிவத்தினை தலைவர், மாவட்ட கேள்விச்சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்(அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீளத் தபால் உறையில் நேரடியாகவோ தபால் மூலமோ யாழ்.செயலக மாவட்ட புனர்வாழ்வ, புனரமைப்பு செயலக(கணக்காளரது) அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2005.04.27 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு முன்பாக சேர்க்கவும். அன்றையதினம் பி.ப 3.15 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்வி கோரியவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமூகமளிக்க முடியும்.

04) நீளத் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "கோதுமை மா வழங்கலுக்கான கேள்வி" என எழுதப்பட வேண்டும்.

05) ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகாரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக (செயல்படுத்தல் முறிக்காக- PERFORMANCE BOND) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். (விபரம் கேள்வி ஆவணத்திலுள்ளது)

06) கூட்டுறவு அபிவிருத்தி வர்த்தக மற்றும் பாவனையாளர், நுகர்ச்சியாளர் திணைக்களத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட மாவாக இருத்தல் வேண்டும்

07) கேள்வி விண்ணப்ப இறுதித் திகதியிலிருந்து 30 நாட்கள் வலுவுடையதாக இருக்கும்.

**க.கணேஷ்,**
**தலைவர் ,அரச அதிபர்,**
**மாவட்ட கேள்விச்சபை, மாவட்டச் செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**

(சீ.11631)

# கிறிஸ் மாட்டின் துல்லியமான பந்து வீச்சு 211 ஓட்டங்களுடன் சுருண்டது சிறிலங்கா



நியூசிலாந்து பந்து வீச்சாளர்களின் துல்லியமான பந்து வீச்சில் சிறிலங்காவுடனான இரண்டாவது டெஸ்ட்போட்டியின் முதல் நாளான நேற்று சிறிலங்கா அணி சகல விக்கெட்டுக்களையுமிழந்து 211 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொள்ள முடிந்தது.

ஒக்லாண்டில் நேற்று ஆரம்பமான போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணித்தலைவர் பிளமிங் சிறிலங்காவைத் துடுப்பெடுத்தாடப் பணித்தார்.

அதன்படி முதலில் களமிறங்கியது சிறிலங்கா அணித்தலைவர் மாவன் அத்தப்பத்து ஓட்டம் ஏதும் பெறாத நிலையில் கிறிஸ்மார்ட்டினின் பந்தில் லோவின்சனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து வந்த குமார் சங்கக்கார 16 ஓட்டங்களுடனும், மகேல ஜெயவர்த்தன ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழந்தனர். மதியபோசன இடைவேளைவரை 65 ஓட்டங்களுக்கு ஐந்து விக்கொட்டை சிறிலங்கா இழந்தது. அப்போது ஆகக் கூடியதாக ஜயசூரியா மட்டுமே 22 ஓட்டங்கள் பெற்று ஆட்டமிழந்திருந்தார். அதன் பின்னர் சந்தன. சமரவீர, மஹ்ரூப் ஆகியோரும் நதன் ஆஸ்லேயிடம் விக்கெட்டைப் பறிகொடுத்தனர்.



சமிந்தவாசின் விக்கெட்டை பிராங்ளின் கைப்பற்றினார். இறுதியில் தேநீர் இடைவேளையின் போது சிறிலங்கா அனைத்து விக்கட்டுக்களையுமிழந்து 211 ஓட்டங்களைப் பெற்றது. கிறிஸ்மார்ட்டின் ஆறு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். சமரவீர, சந்தன முறையே 71,41 என்ற ஓட்டங்களைப் பெற்றனர். பதிலுக்கு ஆடிய நியூசிலாந்து வெளிச்சம் போதாத நிலையில் ஆட்டம் நிறுத்தப்பட்டபோது விக்கெட் இழப்பின்றி 57 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஜேம்ஸ்மார்ஷல் 24 ஓட்டத்துடனும், கிரேக்கம்மிங் 14 ஓட்டங்களுடனும் களத்திலுள்ளனர்.

# உலகக் கிண்ண மகளிர் கிரிக்கெட்; 5-ஆவது முறையாக அவுஸ். சம்பியன்



உலகக் கோப்பை மகளிர் கிரிக்கெட் இறுதிப்போட்டியில் அவுஸ்திரேலிய அணி 98 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியாவை வீழ்த்தி ஐந்தாவது முறையாக சம்பியன் பட்டம் வென்றது.

உலகக் கோப்பை மகளிர் கிரிக்கெட் போட்டி தென் ஆபிரிக்காவில் நடந்தது. இதன் இறுதிப் போட்டி செஞ்சூரியனில் உள்ள சூப்பர் ஸ்போர்ட் பார்க்கில் நேற்று முன்தினம் நடந்தது. இதில் இந்தியா- அவுஸ்திரேலிய அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் ஆடிய அவுஸ்திரேலியா அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் நான்கு விக்கெட் இழப்புக்கு 215 ஓட்டம் குவித்தது. அவுஸ்திரேலிய அணியில் கரென் ரோல்டன் ஆட்டம் இழக்காமல் 107 ஓட்டம் எடுத்தார். லிசா 55 ஓட்டம் எடுத்து ஆட்டம் இழந்தார். இந்திய அணி தரப்பில் ஜுலன் கோசாமி, அமிதாசர்மா, நீது டேவிட் தலா ஒரு விக்கெட் கைப்பற்றினார்கள்.

பின்னர் 216 ஓட்டம் எடுத்தால் வெற்றி என்ற இல்க்குடன் ஆடிய இந்திய அணி அவுஸ்திரேலிய வீராங்கனைகளின் சிறப்பான பந்து வீச்சில் விக்கெட்டுகளை வேகமாக இழந்தது.

இந்திய அணி 46 ஓவர்களில் 117 ஓட்டத்தில் சுருண்டது. இதனால் அவுஸ்திரேலிய அணி 98 ஓட்ட வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று சம்பியன் 'பட்டத்தை தனதாக்கியது.

இந்திய அணியில் அஞ்சு ஜெயின், 29 ஓட்டம், அமிதா சர்மா 22ஓட்டம் ஜுலன் கோசாமி 18 ஓட்டம்அஞ்சும் சோப்ரா 10 ஓட்டங்களுக்கு தலைவர் மிதாலிராஜ் ஆறு ஓட்டங்களை முறையே பெற்றனர். அவுஸ்திரேலிய அணித் தரப்பில் காத்ரின் ஷெல்லா ஆகியோர் தலா இரண்டு விக் கெட்டும், சிலியா சுமித் லிசாதலா ஒரு விக்கெட்டும் கைப்பற்றினர் இந்தியாவில் நான்கு பேர் ரன் அவுட் ஆனமை குறிப்பிடத்தக்கது. இந்த வெற்றியின் மூலம் அவுஸ்திரேலிய அணி ஐந்தாவது முறையாக 'சம்பியன்' பட்டம் வென்றது.

# நான்காவது ஒரு நாள் போட்டி இன்று அகமதாபாத்தில் பலத்த பாதுகாப்பு



ஒரு நாள் தொடரின் நான்காவது போட்டி அகமதாபாத் நகரில் இன்று நடக்கிறது. போட்டியை நடத்த விடமாட்டோம் என சிவசேனா உள்ளிட்ட சில அமைப்புக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றன. ஏற்கனவே, சர்ச்சைக்குரிய நகர் என்பதால், பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

இங்கு டெஸ்ட் போட்டி நடத்தினால், இந்தியப் பயணத்தையே ரத்துச் செய்வோம்" என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை திட்டவட்டமாக மறுத்த இடம் . இருதரப்புப் பேச்சுவார்த்தைக்குப் பிறகு இறங்கி வந்தது பாகிஸ்தான் தரப்பு. அகமதாபாத்தில் ஒரு நாள் போட்டி மட்டும் விளையாடச் சம்மதித்தது. குஜராத் வன்முறைச் சம்பவங்கள் நடந்த இடம் என்பதால், இங்கு விளையாட பாகிஸ்தான் மறுத்திருந்தது..

இதையடுத்து, பாதுகாப்பு மிகக் கெடுபிடியாக்கப்பட் டுள்ளது. கடந்த சில தினங்களில் சிற்சில அசம்பாவிதச் சம்பவங்கள் (இன்சமாம் மீது கல்வீச்சு, வீரர்கள் களத்தடுப்புச் செய்யும்போது, குவளையை எறிந்தது) நடந்திருப்பதால், குஜராத் பொலிசார், முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

# பந்து வீச்சில் தவறில்லை மலிக்கிற்கு இன்சமாம் ஆதரவு



"சொகைப் மலிக் பந்து வீசியதில் எந்தக் தவறுமில்லை" எனப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கிறார் இன்சமாம் உல் ஹக். இந்தியாவுக்கு எதிரான ஜாம் ஷெட்பூர் ஒரு நாள் கிரிக்கெட்டில் பாகிஸ்தான் தலைவர் இன்சமாம் உல்ஹக் ஒரு எதிர்பாராத விடயம் செய்தார். சர்ச்சைக்குரிய ஸ்பின்னர் சொகைப் மலிக்கைப் பந்து வீசச் செய்தார். அவரும் ஏழு ஓவர்கள் வீசி ஒரு விக்கெட் எடுத்தார்.

மலிக் பந்து வீசுவதில் சர்ச்சை நிலவுகிறது. அவரது பந்து வீச்சு முறையை ஐ.சி.சிஇன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை. அப்படியிருக்கையில், அவர் எப்படி பந்து வீசலாம். இன்சமாம் செய்தது சரியா என்று கேள்விகள் எழுந்தன. இதற்கு இன்சமாம் நேற்று முன்தினம் பதிலளித்துள்ளார்.

"மலிக் பந்து வீசியதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. தனது பந்து வீச்சு முறையில் உள்ள தவறுகளை அவர் திருத்திக் கொண்டு விட்டார். ஆகவே அவருக்குப் பந்து வீச்சு வாய்ப்புக் கொடுப்பது என்று முடிவு செய்தோம். இதற்கு நடுவர், போட்டி நடுவர் யாரும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. தவிர, அந்தப் போட்டியில் மலிக் பந்து வீச்சில் எந்தத் தவறும் இல்லை" என்றார் இன்சமாம்.

# இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் போட்டி அக்தருக்கு ஆடும் வாய்ப்பில்லை



இந்திய சுற்றுப்பயணத்துக்கான பாகிஸ்தான் அணியில் வேகப்பந்து வீச்சாளர் சொகைப் அக்தர் சேர்க்கப்பட மாட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் சொஹைப் அக்தர். தசைப்பிடிப்புக் காரணமாக சனவரி மாதத்தில் இருந்து எந்தவொரு போட்டியிலும் ஆடவில்லை. இந்தியப் பயணத்திலும் இடம்பெறவில்லை.

சொஹைப் அக்தர், அணி பிசியோ ரெரபிஸ்ட் காம்ப்டன் மேற்பார்வையில் உடல் தகுதி பயிற்சி பெற்றார். பயிற்சியில் பந்து வீசிய அவர் உடல் தகுதியுடன் இருப்பதாகத் தெரிவித்தார்.

இதேபோல் காயம் அடைந்த மற்றொரு வேகப்பந்து வீச்சாளர் சபீர் அகமதுவும் உடல் தகுதி பெற்றார்.ஆனால், உடல்நலம் சரியில்லாததால் அக்தர் இந்தப்போட்டியில் ஆடவில்லை. எனவே அக்தர் இந்தியாவில் சுற்றுப்பயணம செய்யும் பாகிஸ்தான் அணியில் சேர்க்கப்பட இருந்த வாய்ப்பு மங்கிப் போனது.




# தவறை நினைத்து வருந்துகிறார் டோனி

தேவையில்லாமல் தூக்கி அடித்து ஆட்டமிழந்து விட்டேன்' என்று வருத்தப்படுகிறார் மகேந்திரசிங்டோனி.

இந்தியக் கிரிக்கெட் இளம் விக்கெட் காப்பாளர் மகேந்திர சிங் டோனி. விசாகப்பட்டினம் ஒருநாள் போட்டியில் பிரமாத சதம் அடித்து 'ஹீரோ' அந்தஸ்துப் பெற்றார். ஆனால் கடந்த சனியன்று ஜாம் ஷெட்பூர் போட்டியில் ஏமாற்றிவிட்டார்.20 பந்துகளில் 28 ஓட்டங்கள் குவித்த டோனி, தேவையில்லாமல் நவீத் வீசிய பந்தைத் தூக்கியடித்து ஆட்டமிழந்தார்.

இது பற்றி நிருபர்களிடம் டோனி கூறுகையில், " நான் நன்றாக நிலைத்து நிற்பதற்கு முயற்சி செய்துகொண்டிருந்தேன். அந்த நேரத்தில், அப்படி அவசரப்பட்டு தூக்கி அடித்திருக்கக்கூடாது. வீணாக எனது விக்கெட்டைப் பறிகொடுத்தது வருத்தமளிக்கிறது. பாகிஸ்தான் பந்துவீச்சாளர் நன்றாக வீசினார்கள். அடுத்தபோட்டியில் முழுத் திறமை காட்டுவேன் என்றார்.

# பூப்பந்தாட்டப் போட்டி பதிவுசெய்யக் கோரிக்கை

இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தின் ஆதரவில் தமிழீழ விளையாட்டுத்துறை நடாத்தும் பூப்பந்துப்போட்டி எதிர்வரும் 13ஆம் ,14ஆம் திகதிகளில் கிளி.இளையோர் செயற்பாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. எனவே மேற்படி போட்டியில் கலந்து கொள்ளவிரும்புபவர்கள் உடன் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று 13.04.2005 காலை 10 மணிக்கு முதல் தங்கள் பெயர்களை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதுடன், போட்டிகள் ஒற்றையர்.'. இரட்டையர் போட்டிகளாக நடைபெறும். ஆண்,பெண் இருபாலாரும் கலந்து கொள்ளலாம். போட்டிகள் யாவும் மின் ஒளியில் நடைபெறும்.

விண்ணப்பப்படிவங்கள் இளையோர் செயற்பாட்டு நிறுவனம் அல்லது தமிழீழ விளையாட்டுத்துறை நடுவப்பணியகத்தில் பெற்றுக்கொள்ளலாம், என்பதை அன்புடன் அறியத்தருகின்றனர் விளையாட்டுத்துறையினர்.

வெற்றிபெறும் வீரர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும்.

(சோ)



ஸ்பானிஷ் மோட்டார் சைக்கிள் கிராண்ட்பிரிக்ஸ் போட்டி ஸ்பெயினில் நேற்று முன்தினம் நடந்தது. இதில் இத்தாலியின் வலன்டினோ ரோஸ்சி (46) அதி விரைவாக ஓட்டி சம்பியன் பட்டம் வென்றார். சம்பியன் கிண்ணத்துடன் வலன்டினோ.

# இறுதிப்போட்டிக்கு டேவன் போர்ட்தகுதி

அமெரிக்காவில் உள்ள அமெலித்தீவில் டென்னிஸ் போட்டி நடந்து வருகிறது. இதன் பெண்கள் ஒற்றையர் அரை இறுதியில் லிண்ட்சே டேவன்போர்ட் (அமெரிக்கா) நாடியா பெட்ரோவா (ரஷ்யா) மோதினார்கள். இதில் டேவன்போர்ட் 6-0,6-3 என்ற நேர்செட்டில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

# டெஸ்ட் அந்தஸ்துப்பெறாத நாடுகளின் நடுவர்களுக்கு சர்வதேசப் போட்டியில் வாய்ப்பு




கிரிக்கெட்டில் டெஸ்ட் அந்தஸ்த்துப் பெறாத 10 நாடுகளைச் சேர்ந்த போட்டி நடுவர்களுக்கு சர்வதேசப் போட்டிகளில் பணியாற்ற வாய்ப்பளிப்பது பற்றி ஆராயப்பட்டு வருகின்றது.

இந்த பத்துப் பேரும் பெர்முடா, டென்மார்க், பிஜி, ஜேர்மனி, இந்தோனேஷியா,அயர்லாந்து நேபாளம் சிங்கப்பூர், ஸ்கொட்லாந்து, கென்யா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களாவர்.

இவர்களை முதலாவதாக மினிஉலகக்கிண்ணப்போட்டித் தொடரில் ஈடுபடுத்தவும், பின்னர் அவர்களின் திறமையை இனங்கண்டு உலகக்கிண்ணப்போட்டிகள் போன்ற தரம் கூடிய போட்டிகளில் ஈடுபடுத்தவும் தீமானிக்கப்பட்டுள்ளது. சர்வதேச கிரிக்கெட்சபை அபிவிருத்தி முகாமையாளர் மத்தியுகென்னடி இது பற்றிக் கூறியிருப்பதாவது வீரர்களைப் போன்று அலுவலர்களையும் சர்வதேசப் போட்டிகளில் ஈடுபடுத்துவதே குறிக்கோளாகும் என்றும் தெரிவித்துள்ளார்.


# தென்னாபிரிக்கா அணி முன்னிலையில்



தென்னாபிரிக்கா-மேற்கிந்தியத் தீவுகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாள் நிறைவில் தென்னாபிரிக்கா தனது முதல் இனிங்சிற்காக ஆறு விக்கெட்டை இழந்து 370 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

மேற்கிந்தியத்தீவு அணி முதல் இன்னிங்சில் 347 ஓட்டம் குவித்தது. பின்னர் முதல் இன்னிங்சை விளையாடிய தென்னாபிரிக்கா இரண்டாவது நாள் ஆட்ட நேர முடிவில் மூன்று விக்கெட் இழப்புக்கு 182 ஓட்டம் எடுத்திருந்தது. சிமித் 90 ஓட்டங்களுடனும், ஜியோன்டகி ஒரு ஓட்டத்துடனும் ஆட்டம் இழக்காமல் இருந்தனர்.

நேற்று முன்தினம் மூன்றாவது நாள் ஆட்டம் நடந்தது. தென்னாபிரிக்காவின் சிமித் அபாரமாக விளையாடிச் சதம் அடித்தார். நேற்று முன்தினம் ஆட்டநேர முடிவில் தென்னாபிரிக்கா ஆறு விக்கெட் இழப்புக்கு 370 ஓட்டம் எடுத்து இருந்தது. பிரின்ஸ் 41 ஓட்டத்துடனும் மார்க் பவுச்சர் 28 ஓட்டத்துடனும் ஆடிக்கொண்டிருந்தனர்.



## சிந்தனைக்கு

கல்வியும், மொழியும், பண்பாடும், நிலமும், எமது இனக்கட்டமைப்பைத் தாங்கி நிற்கும் தூண்கள.

தமிழீழ தேசியத் தலைவர்.


ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 12-04-2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


## எதிர்பார்க்கப்படும் ஒத்துழைப்பு!

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு, சுனாமி அனர்த்த மீள் கட்டு மான நடவடிக்கை என்பன தொடர்பாக சர்வதேச சமூகம் பல அபிப்பிராயங்களை வெளியிட்டுள்ளதோடு, இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான தீர்வு, சுனாமி அனர்த்த மீள்கட்டுமானத் திற்கான பொதுக்கட்டமைப்பு உருவாக்கம் என்பன தொடர்பாக தமது ஆதரவையும், ஆலோசனைகளையும் அவை வழங்கியும் வந்துள்ளன

சமாதான உடன்பாடு கைச்சாத்தாகி – அதன் பின்னர் நடந்த பேச்சுவார்த்தைகளின்போது முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக சர்வதேச நாடுகள் குறிப்பாக மேற்குலக நாடுகள் தமது ஆதரவை வெளிப்படுத்தியிருந்தன. இடைக்கால நிர்வாக சபை என்பது ஏற்புடையதொன்றே என்ற நிலையை அவை கொண்டிருந்தன.

ஆனால், சிறிலங்கா அரசாங்கம் – குறிப்பாக, சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், அவரது கட்சியினரும் , சகபாடிகளும் இதனை ஏற்றுக கொள்ளவில்லை. இந்நிலையில் அன்று ஆட்சியில் இருந்த ஐ.தே. முன்னணியினர் இது குறித்து முன்னேற்றகரமான நடவடிக்கை எதையும் மேற்கொள்ளவில்லை.

இதேவேளை, இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வாக சமஷ்டி ஆட்சி முறை அமையலாம் என்பதையும் சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டிருந்தது. முன்னாள் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அஸ்லீவில்ஸ் அமெரிக்க சமஷ்டி முறை இனப்பிரச்சினைத் தீர்விற்கு பரிசீலிக்கத்தக்கது எனத் தெரிவித்திருந்தார்.

ஆனால், இதுவும் சிறிலங்கா ஆட்சியாளர்களான – குறிப்பாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவினாலும், அவர்களது கூட்டணி களான ஜே.வி.பி.யினராலும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. பலமான எதிர்ப்பும், சமாதான முயற்சிகளில் ஈடுபட்ட அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கான முயற்சிகளிலுமே இவர்கள் அக்கறை காட்டினர். அவர்களின் விருப்பிற்கேற்ப ஆட்சியும் கவிழ்க்கப்பட்டது.

இதன் பின்னர் தற்பொழுது சுனாமி அனர்த்த மீள்கட்டுமான நடவடிக்கை தொடர்பான பொதுக்கட்டமைப்பு விவகாரத்திலும் அரசாங்கம் இழுத்தடிப்புச் செய்வதாகவேயுள்ளது. அதாவது, உருவாக்கப்பட வேண்டிய பொதுக்கட்டமைப்புத் தொடர்பான விடயத்தில் அரசாங்கம் இணக்கப்பாடு எதற்கும் வருவதாய் இல்லை

அதாவது தமிழ்மக்களின் நியாயபூர்வ உரிமைகளை வழங்குதல என்பதும், தமிழர் தாயகத்தில் ஏற்பட்ட பேரழிவில் இருந்து மக்களை மீட்டெடுத்து அவர்களுக்குப் புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள் ளுதல் என்ற விடயத்திலும், அரசாங்கம் பாரபட்சமற்ற முறையிலும் நேர்மையான முறையிலும் நடவடிக்கைகளை மேற்கொள்வதாக இல்லை.

ஆனால், இத்தனைக்கும், சிறிலங்கா அரசாங்கம் பாதுகாப்பு நடவடிக்கையில் எந்தவித தளர்ச்சியையும் காட்டியதாக இல்லை. சிறிலங்கா ஆயுதப் படைத்தரப்பு ஆயுத தளபாட ரீதியில் நவீனப்படுத்தப்பட்டு வருவதோடு, ஆயுதப் படையின் ஆளணிப் பெருக் கத்திலும் தீவிரமாக ஈடுபாடு காட்டி வருகின்றது.

இவை ஒருபுறம் இருக்க, வெளிநாடுகளில் இராணுவ ரீதியிலான பயிற்சியும், ஆலோசனைகளும் பெறப்படும் அதேவேளை, களமுனையை அவதானித்து ஆலோசனை வழங்குவதற்கென சர்வதேச நாடுகளின் குறிப்பாக பெரும்வல்லரசுகளின் ஒத்துழைப்பைப் பெறுவதிலும் ஆர்வம் காட்டி வருகின்றது. இதன் ஓர் அங்கமாக உயர்மட்டப்படை அதிகாரிகள் வரழைக்கப்பட்டும் ஆலோசனைகள் பெறப்பட்டும் வருகின்றன.

இந்த வகையில், அமெரிக்கா, பாகிஸ்தான், இந்தியா, ரஷ்யா போன்ற நாடுகளின் உயர் மட்டத் தளபதிகள் இலங்கைக்கு விஜயங் களை மேற்கொண்டனர். இவர்கள் பல இடங்களுக்கு விஜயங்களை மேற்கொண்டதோடு, தமது ஆலோசனைகளையும் வழங்கியும் உள்ளனர். சிலவேளைகளில் சிறிலங்கா தாரப்பால் விளக்கம் கோரிப் பெற்றுக்கொள்ளவும் படுகின்றது.

அதாவது, அரசியல் தீர்வு, சுனாமி அனர்த்த மீள் கட்டுமானப் பணிக்கான பொதுக்கட்டமைப்பை உருவாக்குதல் போன்ற விடயங்களில் உலக நாடுகளில் ஆலோசனைகளுக்கு ஒத்துழைப்பையோ, இணக்கத்தையோ வெளிப்படுத்தாத சிறிலங்கா ஆட்சியாளர்கள் வல்லரசுகளிடம் இராணுவ ரீதியிலான ஒத்துழைப் பையும், ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்வதில் மட்டும் முனைப்புக் காட்டுகின்றனர்.

இந்நிலையானது, சிறிலங்கா ஆட்சியாளர்கள் அரசியல்தீர்வு, சுனாமி அனர்த்த மீள் கட்டுமான விடயங்கள் போன்றவற்றில் எத்தனை தூரம் அக்கறையானவர்களாக உள்ளனர் என்பதையே வெளிக்காட்டுவதாய் உள்ளது. அதாவது, இராணுவ ரீதியிலான ஒத்துழைப்பு, உதவிகள் என்பனவே இன்றும் சிறிலங்கா ஆட்சியாளர் களினால் வரவேற்கப்படுவாதகவுள்ளது.

வேறுவிதமாகக் கூறுவதனால், சர்வதேச சமூகத்திடம் யுத்தத்திற்கான ஒத்துழைப்பே தற்பொழுதும் சிறிலங்கா ஆட்சியாளர்களி னால் எதிர்பார்க்கப்படும் ஒன்றாகவுள்ளது.

# விரைவாக நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த புலிகளிடம் இடைக்கால சுயாட்சியை வழங்குக!

## சனாதிபதிக்கு வவுனியா வெகுசன அமைப்புக்கள் வேண்டுகோள்

இலங்கையில் அதியுயர் பதவியையும், அதிகாரங்களையும் கொண்டு அதனூடாக நிரந்தர சமா தானத்தை ஏற்படுத்துவோம் என்று வாக்குறுதி அளித்து ஆட்சிபீடம் ஏறிய சந்திரிகா அரசாங்கம் தற்போது ஏற்பட்டுள்ள சகல தடை களையும் நீக்கி இன்னும் சில தினங்களுக்குள் இலங்கை வரவிருக்கும் நோர்வே விசேட தூதுவரது அனுசரணையுடன் மீண்டும் தமிழீழ விடுதலைப் புலி களுடன் பேச்சுவார்த்தையை ஆரம் பித்து, மிக விரைவாக நிரந்தர சமாதா னத்தை ஏற்படுத்துவதற்காக இடைக் கால சுயாட்சி நிர்வாக சபையை தமிழீழ விடுதலைப்புலிகளிடம் வழங்கி நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என வவுனியா மாவட்ட மக்கள் சார்பாக வவுனியா மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத் துள்ளது.

நேற்று வவுனியாவில் இடம் பெற்ற பேரணியின் முடிவில் சிறிலங்கா சனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட மகஜரிலேயே இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்'கப்பட்டுள்ளதாவது:

வன்செயல் காரணமாக புலம் பெயர்ந்தோர் தொடர்ந்தும் அகதி முகாம்களில் (வெளிநாட்டிலும், உள்நாட்டிலும்) எவ்வித அடிப்படை வசதிகளுமின்றி துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளை, அவர்களது பாரம்பரிய குடிநிலங்கள், பயிர் செய்யும் வயல் நிலங்கள், பொதுக்கட்டடங்கள், பாடசாலைகள், பொதுப் போக்குவரத்துப் பாதைகள் என்பன தொடர்ந்தும் இராணுவத்தி னரால் ஆக்கிரமிக்கப்பட்டு அவர் களது கட்டுப்பாட்டிலேயேயுள்ளது.

இவற்றினால் மக்கள் விரக் தியின் விளிம்பில் இருப்பதுடன், பாடசாலை மாணவர்கள். மக்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடாத்து கின்றனர். மீள் குடியேற்றம் மந்த வேகத்திலேயே நடைபெறுகின்றது. வெளிநாட்டு நிதியுதவிகள் அவர் களைச் சென்றடையாது வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தப் பட்டும், துஷ்பிரயோகம் செய்யப் பட்டும் வருகின்றது.

சுனாமிப் பேரலை அனர்த் தத்திற்கு தமது உதவிக்கரங்களை நீட்டியவாறு இலங்கைக்கு விஜயம் செய்த கொபிஅனான் உட்படப் பல உலகத் தலைவர்கள் வடக்குக் கிழக்கைப் பார்வையிடுவதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் திட்டமிட்டு இடைநிறுத்தப்பட்டன. வெளிநாட்டில் இருந்து கிடைக் கப்பெற்ற நிதி உதவிகள் விநியோ கத்திலும் எமது பிரதேசம் புறக் கணிக்கப்பட்டுள்ளது. ஆனால் எமது பாதிப்புற்ற பிரதேசங்களை உலக நாடுகளுக்கு விளம்பரப்படுத்தியே அதிக நிதி உதவியை அரசாங்கம் பெற்றுக்கொண்டது என்பதைக் சுட்டிக்காட்டுகின்றோம்.

பேச்சுவார்த்தை மூலமே நிரந்தர சமாதானத்தை அடைய முடியும் என தாங்கள் பல சந்தர்ப்பங்களில் கூறி வருவதை நாம் அறிவோம். ஆனால் தங்கள் கட்சியில் இருக்கும் 'சில விசமிகள் மற்றும் அரசின் பங்கு மாற்றுக் கட்சிக்காரர்களது நிர்ப்பந்தம் காரணமாக தாங்கள் தடுமாற்றம் அடைந்த சந்தர்ப்பங்களும் உண்டு. தங்களது உட்பூசல் காரணமாகச் சமாதானப் பேச்சை ஆரம்பிக்க எடுக்கும் நடவடிக்கைகள் மழுங்கடிக்கப்பட்டு. தங்களது இயலாத் தன்மையை மூடி மறைப்பதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளே பேச்சுவார்த்தைக்கு வர மறுக்கின்றார்கள் என உலக நாடு களுக்குப் பொய்ப்பிரச்சாரம் செய்வ தனால் மேலும் சமாதான முன் னெடுப்புக்களில் பின்னடைவு ஏற்பட்டு, மீண்டும் இந்நாட்டில் யுத்த மேகம் தோன்றி மக்களுக்கு பேரழி வையே ஏற்படுத்தும் என தங் களுக்கு நினைவூட்ட விரும்புகிறோம் என அம்மகஜரில் தெரிவிக் கப்பட்டுள்ளது. (21,10)

# தேர்தல் திணைக்களத்துடன் தொடர்புகளை அரசியல் கட்சிகள் பேணுவதில்லை

## –தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க

(கொழும்பு)

இலங்கையில் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகள் முறையான தொடர்புகளைத் தம்முடன் பேணுவதில்லையென்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமை காரணமாக நாட்டின் சனநாயகத்தை முன்னெடுத்துச் செல்வதில் பாரிய பிரச்சினைகள் எதிர்நோக்கப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தெற்காசியாவிலுள்ள அரசியல் கட்சிகளின் பங்களிப்புத் தொடர்பான கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றுகையில், அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், தற்போது இலங்கையில் 51 அரசியல் கட்சிகள் உள்ளன. இவற்றில் 23 கட்சிகள் கடந்த மூன்று வருடகாலமாக எந்தவித தொடர்புகளையும் கொண்டிருக்கவில்லை.இது தவிர ஐந்து கட்சிகளிடமிருந்து தகவல்கள் எதுவும் கடந்த 14 வருட காலமாகக் கிடைக்கவில்லை. மேலும் இந்தக் கட்சிகள் அவற்றின் நிதிகள் சம்பந்தமாகவோ, நிதிக்கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாகவோ எதனையும் அறிவிக்கவில்லை.

அநேகமான கட்சிகள் இதை மற்றவர்களுக்குப் போதிப்பது போன்று நடந்துகொள்வதில்லையென்றும் ஆணையாளர் குற்றம் சாட்டினார்.

ஏற்கனவே அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகள் தொடர்பாகவும் அவை எடுக்கும் தீர்மானங்கள் தொடர்பாகவும் ஒளிவுமறைவற்ற தன் மையுடன் நடந்துகொள்ள வேண்டு மென்றும் வலியுறுத்தி அவர் கூறினார்.

தேர்தல்களில் வாக்களிப்பதற்கு முன்னதாக மக்கள் அரசியல் கட்சிகளின் உண்மையான நிலை பற்றி சிந்திக்கவேண்டும் என்றும் தேர்தல் ஆணையாளர் மேலும் கேட்டுக் கொண்டார்.

# சுமாத்திரா பூமியதிர்ச்சி காரணமாக இலங்கையில் மண்சரிவு ஏற்படலாம்

## பேராதனைப் பல்கலை பூகோளவியல் விரிவுரையாளர் எச்சரிக்கை

(கொழும்பு)

சுமாத்திராத்தீவிற்கு அருகில் கடந்த டிசம்பர் மாதம் ஏற்பட்ட பூமியதிர்ச்சியின் காரணமாக இலங்கையில் மண்சரிவு ஏற்படக் கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதாக பேராதனைப் பல்கலைக்கழகப் பூகோளவியல் சிரேஷ்ட விரிவுரையாளர் சி.பி. திசாநாயக்க எச்சரித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், மூன்று தினங்களாகத் தொடர்ச்சியாக மழை பெய்தாலோ அல்லது மரங்கள், பாறைகள் ஆகியன சரிந்த நிலையில் மாறுபட்டுகாணப்பட்டாலோ, நீரோட்டங்கள் மாறுபட்டாலோ உடனடியாக மக்கள் அந்தப் பிரதேசங்களில் இருந்து வெளியேறவேண்டும். இந்த நில அதிர்வுகள் நீரோட்டங்களிலும் தாக்கத்தைச் செலுத்தும்.இந்தத் தாக்கங்கள் குறித்து மக்கள் விழிப்புடன் இருப்பதுடன் மழை காலங்களில் இவ்விடயத்தில் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மட்டக்களப்பில் 2837 பேருக்கு சுனாமி மரணக் கொடுப்பனவு

(மட்டக்களப்பு)


மட்டக்களப்பு மாவட்டத்தில் சுனாமி தாக்கத்தால் பலியான 2837 பேருக்கான மரணக்கொடுப்பனவாக மூன்று கோடி 38 லட்சத்து 40 ரூபா அவர்களது உறவினர்களிடம் வழங்கப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் வேல்முருகு சண்முகம் தெரிவித்தார். மண்முனை வடக்கு பிரதேச செயலகப்பிரிவில் 1446 பேர் சுனாமிக்குப் பலியாகியுள்ளனர். இவர்களுக்கு ஒரு கோடி 85 லட்சத்து 85 ஆயிரமும், வாழைச்சேனையில் மரணமான 451 பேருக்கு 57 லட்சமும், வாகரையில் 314 பேருக்கு 47 லட்சமும், களுவாஞ்சிக்குடியில் 154 பேரும், செங்கலடியில் 160 பேரும் உட்பட 2837 பேருக்கு தலா 15 ஆயிரம் ரூபாய் வீதம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இதைத்தவிர 32310 குடும்பங்கள் சுனாமியால் சமையல் பாத்திரங்களை இழந்துள்ளனர். இவர்களுக்கு தலா 2500 ரூபாய் வீதம் ஏழுகோடி மூன்று லட்சம் ரூபாவுக்கான சமையல் பாத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


# லெப்.கேணல் கௌசல்யன் கலைக்கூடம் சுவிஸில் திறப்பு

(சூரிச்)

சுவிஸ் பேர்ண் மாநில தமிழர் இல்ல லெப். கேணல் கௌசல்யன் கலைக்கூடத்திறப்பு விழா கடந்த ஞாயிறு பிற்பகல் 4.30 மணியளவில் நடைபெற்றது.

விடுதலைப்புலிகளின் சுவிஸ் கிளையின் துணைப் பொறுப்பாளர் நேசன் நாடாவை வெட்டி கலைக்கூடத்





தைத் திறந்துவைத்தார். சுவிஸ் தமிழர் இல்ல ஒருங் கிணைப்பாளர் கிருஷ்ணா அம்பலவாணர் தலைமையில், இவ்வைபவம் நடைபெற்றது.

சுவிஸ் தமிழர் இல்லங்களின் பொறுப்பாளரான மதிய ழகன் உரையாற்றுகையில், சுவிஸ் நாட்டில் வாழும் தமிழ்மக்களிடையே தொடர்பாடலை ஏற்படுத்தும் மையங் களாகவும், இளைய தலைமுறையினரிடையே கலை பண்பாட்டு வளர்ச்சிக்கான களங்களாகவும் தமிழர் இல் லங்கள் விளங்குகின்றன என்றார்.

விடுதலைப்புலிகளின் சுவிஸ் கிளை துணைப் பொறுப்பாளர் நேசன் உரையாற்றுகையில், விடுதலைப் போராட்டத்தில் எத்தனையோ சோதனைகள் நெருக்கடிகள் வந்தவேளைகளில் எல்லாம் தீர்க்க தரிசனத்துடன் தலைவர் எடுத்த முடிவுகளே விடுதலைப்போராட்டத்தின் வளர்ச்சிக்கும், வெற்றிக்கும் காரணம் என்றார்.

ஊடகவியலாளர் இரா.துரைரத்தினம் பேசுகையில், கிழக்கில் நெருக்கடி நிறைந்த வேளையில் தனது சொந்த வாழ்வைத் தியாகம் செய்து தேசியத் தலைமையின் கரங்களைப் பலப்படுத்த கௌசல்யன் செய்த தியாகங் கள் வரலாற்றில் மறக்கமுடியாதவை என்றார்.

# எரிபொருட்களின் விலை விரைவில் அதிகரிக்கும்

(கொழும்பு)

எரிபொருட்களின் விலைகள் எதிர் வரும் நாட்களில் அதிகரிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

உலக சந்தையில் எரிபொருட்களின் விலையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பே இதற்கான காரணமாகும்.

எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடு களின் தலைவர்கள் சுட்டிக்காட்டியுள் ளமைக்கு அமைய மசகு எண்ணெய் பீப்பா ஒன்றின் விலை 100 டொலர் களாக அதிகரிக்கும் எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பு ஒன்றில் கருத்துத் தெரிவித்த எண் ணெய்க் கூட்டுத்தாபனத் தலைவர் ஜாலிய மெதகம இதனைத் தெரிவித் துள்ளார்.

எரிசக்தி மின்சாரத்துறை அமைச்சில் நடைபெற்ற இந்த ஊடக மாநாட்டில் சக்தி வளங்களைப் பாதுக்காக்கப்பது எவ்வாறு என்பது தொடர்பிலும் கருத் துரைக்கப்பட்டது.

தற்போதுள்ள நிலையில் எரிபொரு ளுக்காக கடந்த மூன்று மாதங்களுக் குள் அரசாங்கத்திற்கு 2378 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள் ளது

மின்சாரத்தை உற்பத்தி செய்வ தற்காக 60 வீத எரிபொருள் பயன் படுத்துவதாகவும் சுட்டிக்காட்டப் பட்டது.

இந்த நிலையில் எரிபொருளின் விலையில் ஏற்படும் அதிகரிப்பானது நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் என எதிர் பார்க்கப்படுகிறது.

## பேச்சுக்களை...

விரைவில் "தமிழீழம் மலரும்", "சர்வதேசமே புலிகள் தான் தமிழர் கள்,தமிழர்கள்தான் புலிகள்", "சுனாமி நிதி உதவியைப்பாரபட் சமின்றி வழங்கு" போன்ற சுலோகங் களைத் தாங்கிச் சென்றனர்.

பேரணி வவுனியா நகரசபை மைதானத்தைச் சென்றடைந்ததும் அங்கு திறந்தவெளி அரங்கில் வவு னியா மாவட்ட வெகுசன அமைப்புக் களின் ஒன்றியத் தலைவர் ச. குல தேவராஜா தலைமையில் எழுச்சிக் கூட்டம் நடைபெற்றது. இதில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர்களான செல்வம் அடைக்கல நாதன், சிவசக்தி ஆனந்தன் ஆகி யோர் உரையாற்றினர். நிரந்தர சமா தானத்திற்கான பேச்சுவார்த்தையை உடன் ஆரம்பிக்குமாறு கோரி சனாதிபதி சந்திரிகாவிற்கு அனுப்பு வதற்கான மகஜர் வவுனியா அரச அதிபர் சி. சண்முகத்திடம் வவுனியா மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் ச. குலதேவராஜா வால் கையளிக்கப்பட்டது.

இந்த மகஜர்களின் பிரதிகள் செயலாளர் நாயகம் ஐக்கிய நாடுகள் சபை, நோர்வேயின் இலங் கைக்கான விசேட தூதுவர், தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர், இலங்கை போர்நிறுத்தக் கண் காணிப்புக்குழுத் தலைவர், எதிர்க் கட்சித் தலைவர், பிரதம மந்திரி, இலங்கைக்கான நோர்வேத் தூதுவர், வவுனியா அரசாங்க அதிபர், வன்னி பாராளுமன்ற உறுப்பினர்கள், ஆகி யோருக்கும்கொழும்பிலுள்ள சர்வ தேச தூதுவராலயங்களுக்கும் வழங் கப்பட்டுள்ளன. (10,21)

## கிளி.யிலும்...

காட்டிவரும் அசமந்தப் போக் கைக் கண்டித்துமே கிளி நொச்சி யில் கண்டனப் பேரணி இடம்பெற் றுள்ளது.

இன்று காலை 10.00 மணியள வில் கிளிநொச்சி சந்திரன் பூங்கா முன்றலில் இருந்தும் கிளிநொச்சி கந்தசாமி ஆலய முன்றலிலிருந் தும் ஆரம்பமாகி கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் கரியால யத்திற்குச் சென்று அங்கு கண்டனக் கூட்டமும், மகஜர் கையளிப்பும் இடம் பெறும்.

சாவகச்சேரி பஸ்நிலையத்தில் இருந்து காலை 10.00 மணிக்கு பேரணி ஆரம்பமாகவுள்ளது. தென்ம ராட்சிப் பிரதேச செயலகம் வரை சென்று அங்கு வைத்துக்கோரிக்கை மகஜர்கள் கையளிக்கப்படவுள்ளன.

முக்கியமான ஐந்து கோரிக் கைகளை முன்வைத்து இப்பேரணி நடத்தப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை வழங்கப்பட வேண்டும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக் களின் புனர்வாழ்வுப் புனர்நிர் மாணிப்புக்கான பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும்.

போராளிகள் படுகொலை செய் யப்படுதல் நிறுத்தப்பட வேண்டும்.

யுத்தத்தினால் இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்த மக்களுக்கு நிறுத் தப்பட்ட நிவாரண உதவிகள் இயல்பு வாழ்க்கை திரும்பும் வரை தொடர்ந்து வழங்கப்படுதல் வேண் டும்.

தென்மராட்சிப் பிரதேச கடற்றொழிலாளர்கள் சுதந்திரமாகத் தொழிலை மேற்கொள்ள அனுமதிக் கப்பட வேண்டும் ஆகிய கோரிக்கை களை முன்வைத்தே பேரணி நடத் தப்படுகின்றது. (தீ,28)

## கண்ணிவெடிஅகற்றும் குழுவின் ஒன்றுகூடல் நிகழ்வு

(மட்டக்களப்பு)

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தி னரால் நிர்வகிக்கப்படும் கண்ணிவெடி அகற்றும் பணியாளர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வு மட்டக்களப்பு செல்வநாயகம் நினைவு மண்டபத் தில் மட்டக்களப்பு தமிழர் புனர்வாழ் வுக்கழகப் பணிப்பாளர் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இவ் ஒன்றுகூடலில் நிறுவனத் தின் எதிர்காலத் திட்டங்களும், பாதிக் கப்பட்ட மக்களுக்கான சேவையில் நிறுவனத்திற்கான நெருக்கடிகளைக் குறைத்துக் கொள்ளுதல், திட்டச் செலவீனங்களைக் குறைத்துக் கொள் வது, தகவல் தொடர்புகளைக் கையாள்வது என்பன குறித்து விளக் கமாக ஆராயப்பட்டது.

## அம்பாறையில்....

பழுகாமம் வீரன்சேனையைச் சேர்ந்த ஜெயசேகர பண்டாபுஜந்தன்(வயது 23) என்பவரே இவ்வாறு கைது செய் யப்பட்டவராவார்.இவர் சோதனைச் சாவடியில் சோதனைக்கு உள்ளாக் கப்பட்டபோது துப்பாக்கியுடன் உப யோகிக்கும் கத்தி ஒன்றும் இரண்டு தேசிய அடையாள அட்டைகளும் கண்டு பிடிக்கப்பட்டதையடுத்தே இவர் கைது செய்யப்பட்டதாக அதிரடிப் படையினர் கூறுகின்றனர்.

## ஈ.பி.டி.பி...

இவர் கோணேசர் கோவிலில் இருந்து இன்னுமொரு நபருடன் உந்துருளியில் திருகோணமலை நகரை நோக்கி வந்துகொண்டிருந்த சமயம் இச்சம்பவம் நடைபெற்றுள் ளது.

பலியானவர் மூன்று மாதங் களுக்கு முன்புதான் யாழ்ப்பாணத் தில் இருந்து திருகோணமலைக்கு வந்தவரென சிறிலங்கா நடவடிக் கைத் தலைமைச் செயலகம் கூறி யுள்ளது.

இது தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக திருமலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எச்.என்.பி அம்பன்வல தெரிவித்தார். துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் திருகோணமலை பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டபோது அவர் மரணமானார் என்று வைத் தியசாலை வட்டாரங்கள் தெரிவித் தன.இவர் திருகோணமலை மாவட்ட ஈ.பி.டி.பி யின் இணை அமைப்பாள ரும் முன்னாள் காரைநகர் பிரதேச ஈ.பி.டி.பி அமைப்பாளரும் மானிப் பாய் பிரதேசசபை உறுப்பினரும் ஆவார்எனவும் தெரிவிக்கப்படுகின் றது. (25)

# வீதிக்காக சுவீகரிக்கப்படும் காணிகளுக்கு நடைமுறை விலையில் நஷ்டஈடு

(அலுவலக செய்தியாளர்)

யாழ். குடாநாட்டில் வீதிகள் புனரமைப்பிற்காக சுவீகரிக்கப்படும் காணி களுக்குத் தற்போதைய நடைமுறை விலையில் நஷ்டஈடு வழங்கப் படவுள்ளது.

ஆறு பிரதான வீதிகளை புனரமைக்கு முகமாக வீதியின் மையப்பகுதியில் இருந்து இருபுறமும் பதினைந்து மீற்றர் அகலமாக்கும் நோக்கோடு சுவீகரிக் கப்படும் காணிகளுக்கு இலங்கையின் ஏனைய பகுதிகளில் நடைமுறையில் உள்ளது போன்று தற்போதைய நடைமுறைப் பெறுமதிக்கே நஷ்டஈடு வழங்கப்படவுள்ளது.

அவ்வாறு சுவீகரிக்கப்படும் நிலங்களில் உள்ள உத்தரவுபெற்ற கட்ட டங்களிற்கு மட்டுமே நஷ்டஈடு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (சு)

# கடற்படைச் சிப்பாயின் சடலம் அழுகிய நிலையில் மீட்பு

(கொழும்பு)

அனுராதபுரம் வாகொல்லாகட கிம்புலாபிட்டியாவ எனும் இடத்தில் நேற்று முன்தினம் அழுகிய நிலை யில் கடற்படைச்சிப்பாய் ஒருவனின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை சிறிலங்கா கடற்படை முகாமைச் சேர்ந்த (வயது 20) சோமபாலகே சமன் குமார் எனும் கடற்படைச்சிப்பாயின் சடலமே இது வென அவரின் உறவினர்கள் நேற்று அடையாளம் காட்டியுள்ளனர். இவர் கடந்த 29 ஆம் திகதி முதல் காணா மல் போயுள்ளதாக திருமலை கடற் படை முகாமினால் பொலிசில் புகார் செய்யப்பட்டிருந்தது. இவரின் மரணம் எவ்விதம் சம்பவித்தது என்பது குறித்து எதுவித தகவல்களும் இது வரை வெளியாகவில்லை. இவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகமும் நிலவுகிறது. அனுரா தபுரம் பொலிசார் மேலதிக விசார ணைகளை மேற்கொண்டு வரு கின்றனர்.

# வியாபாரி ஒருவரைக் காணவில்லையென மனித உரிமைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப் பகுதியில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த ஒருவர் கடந்த நான்காம் திகதி முதல் காணாமல்போயிருப்பதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வின் யாழ். அலுவலகத்தில் நேற்று முறையிடப்பட்டுள்ளது.

யாழ். கொக்குவில் பகுதியில் உள்ள அவரது வீட்டிலிருந்து சம் பவதினத்தன்று வியாபாரத்தி லீடுபடுவதற்காகப் புறப்பட்ட இராஜ துரை சிவதாசன் (வயது 31) என் பவரே இவ்வாறு காணாமல் போயுள் ளதாக முறைப்பயிடப்பட்டுள்ளது.

பிரஸ்தாப நபருக்கு இனந்தெரி யாத சிலரால் அச்சுறுத்தல்களும், மிரட்டல்களும் விடுக்கப்பட்டு வந்த தாகவும் அவரது குடும்பத்தினர் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர். (33)

# கிழக்கில் துப்பாக்கிச்சூட்டில் மூன்று மாதத்தில் 40 பேர் பலி

கிழக்கு மாகாணத்திலும், அதன் அயல் மாவட்டமான பொலநறுவையிலும் இந்த ஆண்டு சனவரி முதல் இதுவரை நாற்பது பேர் துப்பாக்கிச்சூட்டிற்கும். கிரனேட் வீச்சுக்களுக்கும் இலக்காகிப் பலியானதுடன் 30 பேர் படுகாய மடைந்துமுள்ளனர். இதனைவிட நாற்பதிற்கும் மேற்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களும் கைக்குண்டு விச்சுச்சம்பவங்களும் நடைபெற்றுள்ளன எனவும் பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தடைஉத்தரவு தளர்வு

சிறிலங்கா கிரிக்கெட் நிறுவனம் தொடர்பில் விளையாட்டுத்துறை அமைச்சர் மீது மேல் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த தடைஉத்தரவு மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் தளர்த்தப்பட்டுள்ளது.

சிறிலங்கா கிரிக்கட் நிறுவனத் தினை கலைத்தல் மற்றும் அதன் பதவியினை ரத்துச்செய்தல் ஆகிய இரு விடயங்களை தவிர அமைச்சர் மீது விதிக்கப்பட்டிருந்த ஏனைய தடைகள் இந்தத் தளர்வின் மூலம் விலக்கப்பட்டுள்ளது.

முன்னர் விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவின்படி ஸ்ரீலங்கா கிரிக்கட் தொடர்பில் அமைச்சரால் எந்த வித நடவடிக்கையும் செய்யமுடியாது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

விளையாட்டு அமைச்சர் சிறிலங்கா கிரிக்கெட்டின் பதிவை ரத்துச் செய்தமைக்கு எதிர்ப்புத்தெரிவித்து, சிறிலங்கா கிரிக்கெட்டின் திலங்க சுமதிபால உட்பட்ட குழுவினர் நீதி மன்றத்தில் மனுத்தாக்கல் செய் திருந்தனர் என்பது தெரிந்ததே. (32)

## வீரவணக்கம்...

நாட்டுப்பற்றாளர் - மணியம்மா (சூசைப்பிள்ளை-மார்ஸ்சம்மா மணற் குடியிருப்பு (முல்லைத்தீவு) என்பவரே சாவடைந்தவராவார். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீர வணக்கம் செலுத்துகின்றனர்.

## தென்னாபிரிக்கா

அவர்கள் எடுத்துக்கூறினார்.

விடுதலைப்புலிகளின் அரசியற் குழுவினர் சிபுசிசே நடெபெலி, பிரதமர் குவாசுலு-நரல் மைக்கல் மபுயக்கு, உள்ளூராட்சி அமைச்சர், வீடமைப்புப் பாரம்பரிய நலன்கள் அமைச்சு எனப் பலரையும் சந்தித் தனர். இதன்போது உப சனாதி பதியின் சிரேஷ்ட ஆலோசகர் இப் ரகிமையும் சந்தித்தனர்.

விடுதலைப்புலிகளின் அரசியற் குழுவினர் டேர்பன் தமிழ் அமைப்பால ஒழுங்குபடுத்தப்பட்ட தமிழ்ச்சமூகத் தின் கலாச்சார நிகழ்வொன்றிலும் கலந்துகொண்டனர். அதில் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

# 12 அகதிகள் தாயகம் திரும்பினர்

தமிழ்நாட்டிலிருந்து மேலும் 12 ஈழத் தமிழ் அகதிகள் நேற்றுக் காலை மீன்பிடி வள்ளமொன்றில் மன்னார் வழியாகத் தாயகம் திரும்பியுள்ளனர்.

மன்னார் தீவிலுள்ள கடல்த்திட்டி யொன்றில் இறக்கி விடப்பட்ட இவர்கள், சிறிலங்கா கடற்படையின ரால் மீட்கப்பட்டு தலைமன்னார் பொலிசில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் பட்டபோது இவர்களை சிவில் அதி காரிகள் ஊடாக சொந்த இடங்க ளுக்கு அனுப்பி வைக்குமாறு நீதிமன் றம் உத்தரவிட்டுள்ளது.

## சமுர்த்தி...

விபுலானந்தா வீதியிலுள்ள தனது வீட்டிற்கு நடந்து சென்று கொண் டிருந்த சமயமே இவர் சுட்டுக்கொல்லப் பட்டார். உப பொலிஸ் சேவையில் முன்னர் பணியாற்றிய இவர், சில வருடங்களுக்கு முன்பு அதிலிருந்து விலகி சமுர்த்தி உத்தியோகத்தராக பணியாற்றி வந்தவர் என்பது குறிப் பிடத்தக்கது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது